விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 29 வெள்ளிக்கிழமை (11.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 54

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# பல்லாயிரம் மக்கள் அஞ்சலி; பெண்கள் ஒப்பாரி

# போராளிகளின் வித்துடல்கள் நேற்று விதைப்பு

## பெருமளவு முஸ்லிம்களும் பங்கேற்பு

பொலநறுவை புனானைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளின் வித்துடல்கள் நேற்று மாலை மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன.

நேற்று நண்பகல் மட்டக்களப்பு நகரிலிருந்து நேரடியாக கிரான் மற்றும் சந்தி வெளி ஆகிய இடங்களுக்கு வித்துடல்கள் எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களினால் குறிப்பாக பெண்கள் ஒப்பாரி வைத்து கதறியழுதனர்.

அங்கிருந்து மாலை 'கறுத்தப் பாலம் ஊடாக கரடியனாறு எடுத்துச் செல்லப்பட்டு மாவீரர் துயிலும் இல்லத்திறகு கொண்டு செல்லப்பட்டது. அங்கு போராளிகளுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக பெருமளவான முஸ்லிம்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அங்கு திரண்டிருந்தனர்.

அதற்கு முன்னதாக தாண்டியடிப் பாடசாலை முன்றலில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு உட்பட தளபதிகளும் முக்கியஸ்தர்கள் பலரும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஈகச் சுடரினை ஏற்றி நினைவஞ்சலிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன், மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்களின சம்மேளனத் தலைவர் ஏ.எல். ஜவான், பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி மற்றும் மூத்த தளபதி ரமேஸ் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இதேவேளை வன்னியிலிருந்து தரைவழியாக 35 விடுதலைப் புலிப் போராளிகள் மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். வீரச்சாவைத் தழுவிய போராளிகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தந்த இவர்களுக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடான பயணத்திற்கு இராணுவப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறுமையின் விளிம்பில் போராளிகளும் மக்களும்

# எமது விடுதலைப் பயணம் தொடரும்

# பாசத்துக்குரிய உறவுகள்மீது சத்தியம்




## கௌசல்யனின் இறுதி அஞ்சலியில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

எத்தகைய இழப்புக்கள் வந்தாலும் எமது தேசத்தின் எதிர்காலத்தை நோக்கிய விடுதலைப் பயணம் தொடரும். எங்கள் பாசத்திற்குரிய உறவுகள் மீது இது சத்தியம்.

இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



லெப். கேணல் கௌசல்யன் உட்பட்ட மாவீரர்களின் வித்துடல்களுக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இறுதி அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்.

# அவசர காலச் சட்ட பிரேரணைக்கு ஐ.தே.க. எதிர்த்து வாக்களிக்காது

## தான் எதிர்த்தே வாக்களிப்பேன் என்கிறார் மகேஸ்வரன்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப் படவுள்ள அவசரகாலச் சட்டப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்காது வாக் களிப்பை புறக்கணிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சியின் பாராளு மன்றக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் இந்த அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவிருக்கின்றது.

நடைமுறைப்படுத்தப்படும் அவசர காலச் சட்டம் ஜனநாயகத்திற்கு அச்சுறுத் தலாக அமைகிறதா என்பதை பொறுத்தே எதிர்காலத்தில் அதற்கு எதிராக வாக் களிப்பதா இல்லையா என்பதை ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்கும்.

நாட்டின் ஜனநாயகத்திற்கு மட்டும் அல் லாது தனிமனித சுதந்திரம், தொழில் சங்க நடவ்டிக்கைகள் என்பனவற்றை முடக்கும் நடவடிக்கையை அரசு இதனைப் பயன் படுத்த முற்படுமானால் அவசரகாலச் சட் டத்தை மீளப்பெற வலியுறுத்துவதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக் கிறது.

இதேவேளை அவசரகாலச் சட்டப் பிரே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை ஹர்த்தால்

(நமது நிருபர்)

பொலநறுவை மாவட்டம் புனானைப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் கொலைச் சம் பவங்களைக் கண்டித்து யாழ். குடாநாட் டில் நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக் கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

சுனாமி கடல் அனர்த்தம் தொடர்பாக கிளிநொச்சியில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் கலந்துகொண்டுவிட்டு மட் டக்களப்பிற்கு திரும்பிக்கொண்டிருந்த வழி யில் பொலநறுவை புனானைப் பகுதியில் வைத்து கௌசல்யன் உட்பட 6 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை யாழ். மாவட்டம் முழு வதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள் ளது.

அரசின் அராஜகத்தை உலகிற்கு எடுத் துக்காட்டும் வகையில் கடைகளைப் பூட்டி கல்வி, தொழில் பணிகளை இடைநிறுத்து மாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுவதுடன் சோக கீதங்களை ஒலிபரப்பி பூரண ஹர்த்தாலை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


இதேவேளை நாளைய ஹர்த்தாலுக்கு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பனவும் ஆதரவு தெரிவித்து அறிக்கை களை வெளியிட்டுள்ளன. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கௌசல்யன் தரைவழியாக செல்வது இராணுவத்தினருக்கு மட்டுமே தெரியும்

## இராணுவத்தினரே ஆயுதக்கும்பலுக்கு தகவல் வழங்கினர் என ஐயம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையில் இராணுவத்தினருக்கும் நேரடித தொடர்புள்ளதாக புலிகள் நம்புவதாக கௌசல்யனுடன் சம்பவநாள் பயணம் செய்து சம்பவத்திலிருந்து உயிர் தப்பிய ஒரேயொரு போராளி விநோதன் தெரிவித்துள்ளார்.



நாம் பயணித்த வானை இன்னொரு வானில் துரத்திவந்த குழுவினர் எமது வானை முந்திச்சென்று பொலநறுவை நாமல்கம என்ற இடத்தில் வீதிக்கு குறுக்காக வானை நிறுத்தி எம்மை வழி மறித்தனர். அந்த வானில் இருந்து குதித்த இராணுவ சீருடையணிந்த சிலர் எமது வானில் உள்ள அனைவரையும் கீழே இறங்குமாறு கூறினர்.

எமது வானில் இரு பொலிஸ்கான்ஸ்டபிள்களும் இருந்தனர். எல்லோரும் இறங்கியவுடன் சரமாரியாக எங்களை நோக்கிச் சுட்டுவிட்டு தமது வானில் தப்பித்துச் சென்றுவிட்டனர் என்று அவர் தெரிவித்தார்.

வழக்கமாக விமானப்படையின் ஹெலிக்கொப்டரில் வன்னிக்கும் கிழக்குக்கும் இடையில் பயணங்களை மேற்கொள்ளும் கௌசல்யன் அன்றைய தினம் வாகனத்தில் தரைவழியாக பயணம செய்த தகவல் ஓமந்தை சோதனைச் சாவடியிலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவத்தினரைத் தவிரவேறு யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை.

ஆகவே, இந்தச் சம்பவத்தில் சிறீலங்கா அரச படையினரின் நேரடித் தொடர்பு இருந்துள்ளதாக புலிகள் நம்புகிறார்கள் எனத் தெரிவித்தார். இதே வேளை, கௌசல்யனை கொலையாளிகள் முகத்துக்கு அருகில் வைத்து துப்பாக்கியால் சுட்டதால் முகம் சிதைந்து விட்டதாக பிரேத பரிசோதனை செய்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். மக்களோ, புலிகளோ வித்துடலுக்கு இறுதி மரியாதை செய்யக்கூடாது என்ற நோக்குடன் கௌசலயனின் வித்துடல் மிகக் கொடூரமாக சிதைவடைந்துள்ளது.

பொலநறுவையிலிருந்து கௌசல்யனின் வித்துடலை பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு கொண்டு செல்ல பொலிஸார திட்டமிட்டனர். வித்துடலை கொழும்புக்கு எடுத்துச் சென்றாலோ அல்லது அதற்கு ஏதாவது நடந்தாலோ தேவையில்லாத அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று வன்னயிலிருந்து சென்ற தகவலை அடுத்து - சுமார் 19 மணி நேர இழுத்தடிப்புக்குப் பின்னர் - வித்துடல் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (பு-4)

## வவு.இல் குழுமோதல் இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் நேற்றுமுன்தினமிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலின்போது 17 வயதுடைய இரு இளைஞர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகி வவுனியா பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மின்சாரம் சில நிமிட நேரம துண்டிக்கப்பட்டு இருந்தவேளையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் இருபது இளைஞர்கள் இந்த மோதலில் ஈடுபட்டதாக பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்படுகிறது.

பி.பிரசன்னா, வி.நிரோசன் ஆகிய இருவருமே வாள்வெட்டுக்கு இலக்கானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் ஈடுபட்ட ஏனையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை இச்சம்பவம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)


## கௌசல்யனின் கொலையை கண்டிக்கிறார் ஜீ. எல். பீரிஸ்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அர்சியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கொலையானது கண்டிக்கத்தக்கது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர், இந்தக் கொலைச் சம்பவமானது சமாதான முயற்சிகளை பாரிய அளவில் பாதிக்கும். எனவே, இது குறித்து விசாரணைகளை உடனடியாக பாரபட்சமின்றி அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்றார்.

இதேசமயம, இலங்கை அரசாங்கத்தை ஆதரித்து வரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியத்தவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுள்ளது.



இது குறித்து கருத்துத் தெரிவித்த முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ். சதாசிவம், கௌசல்யன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு மற்றும் போராளிகள் கொல்லப்பட்டமையை தமது முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது என்றார்.

அத்துடன், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எலலா பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து அரசியல் பேதங்களை மறந்து விசாரணையை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அத்துடன், அரசாங்கமும் உடனடியாக பாரபட்சமின்றி விசாரணையை நடத்தி இந்த நாட்டிலே சமாதானத்தை உருவாக்க வேணடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## வவுனியா நகரில் துக்கம் அனுஷ்டிப்பு

தமிழீழவிடுதலைப்புலிகளின் மட்டககளப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட 6 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வவுனியா நகரில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வவுனியா நகரில் உள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. வீதியோரங்களில சிவப்பு, மஞ்சள் கொடிகளும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

முச்சக்கர வண்டிகளிலும் கறுப்புக் கொடிகள் காணப்படுகின்றன. மணிக் கூட்டு சந்தியிலும் ஏனைய முக்கிய சந்திகளிலும் அனுதாப பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

சோக இசை ஒலிக்க விடப்பட்டது. துக்க நாள் கடைப்பிடிக்கு மாறு வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் மக்களை கேட்டுள்ளது. (க)

## இராசி பலன்

**11.02.2005**

**(தை 29 வெள்ளிக்கிழமை)**

**திருதியை முன்னிரவு 11.48 மணிவரை**

**பூரட்டாதி முன்னிரவு 8.11 மணிவரை**

**இராகுகாலம்11.04 - 12.34 மணிவரை**

**சுபநேரம் 06.34 -08.04 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, சுபசெலவு, அமைதிக் குறைவு, பிதாசிந்தை. |
| இடபம் | தெய்வ தரிசனம், தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, பொருட்சேர்க்கை. |
| மிதுனம் | பிறர் உதவி, கடினமுயற்சி, நல்ல செய்தி, அதிகாரம். |
| கடகம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், முயற்சி தாமதம். |
| சிம்மம் | எதிர்பாராத அச்சம், வேலைச்சுமை, காரிய தாமதம், அபகீர்த்தி. |
| கன்னி | தெய்வ தரிசனம், அபூர்வசந்திப்பு, பணவருவாய், நல்லமுயற்சி. |
| துலாம் | பகைவரால் நன்மை, பணவருவாய், திடீர் பயணம், சுகவாழ்வு. |
| விருச்சிகம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணவிரயம். |
| தனுசு | பயந்த சுபாவம், ரோகபயம், அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| மகரம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, தெய்வசிந்தை. |
| கும்பம் | மாதர் நட்பு, பொருள்விரயம், காரிய தாமதம், எதிர்பாராத மனஸ்தாபம். |
| மீனம் | தெய்வசிந்தை, நல்லமுயற்சி, பெரியோர் சந்திப்பு, சயனசுகம். |

**பழைய நேரப்பழ கணிப்பிடப்பட்டது**
**- வளவன்**

## இலங்கையை மீளக்கட்டியெழுப்ப ஜப்பானிய அரசு உதவி வழங்கும்


### நிதியமைச்சரிடம் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் உறுதியளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக நீண்டகால உதவிகளை வழங்குவதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையேயான இந்தச் சந்திப்பு டோக்கியோ நகரில் இடம்பெற்றுள்ளது. சுனாமி அனர்த்தத்தின்போது இலங்கைக்கு உடனடியாக நிதியுதவி வழங்க ஜப்பான் நடவடிக்கை எடுத்தமைக்காக நிதியமைச்சர் சரத் அமுனுகம ஜப்பானிய அரசுக்குத் தமது நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் மருத்துவ உதவிகளை வழங்கியமைக்கும் நிதியமைச்சர் நன்றி தெரிவித்தார். இச்சந்திப்பில் இருநாட்டு உறவுகள் குறித்தும் நீண்ட நேரம பேச்சுவார்த்தை நடைபெற்றது. இச் சந்திப்பில் நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-9)



அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 28 ஆவது நினைவு தினம் நேற்றுமுன்தினம் காலை யாழ்.மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் தலை மையில், அவரது அலுவலகத்தில் அனுஷ்டிக்கப் பட்டது. இதில் செல்லையா விஜயரட்ணம், ஜீ.ஜீ.பொன் னம்பலத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணி விக்கிறார்.

# சுனாமிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த முன்பள்ளி சிறுவர்கள், ஆசிரியர்கள் பொது மக்களின் 45ஆம் நாள் நினைவு கூரல்

(கிளிநொச்சி)

கடந்த 26.12.2004 அன்று நிகழ்ந்த சுனாமிப் பேரலை அனர்த்தம் காரணமாக வடகது- கிழக்குப் பகுதிகளில்உயிரிழந்த முன்பள்ளிச் சிறார்களையும், முன் பள்ளி ஆசிரியர்களையும் நேற்றுமுன்தினம் அனைத்துப் பிரதேசங்களிலும் 45ம் நாள் நினைவு கூரந்து அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

தேசியக்கொடி ஏற்றல்களுடன் ஆரம்பமான இந் நினைவுகூரல் நிகழ்வுகளில் முன்பள்ளிச் சிறார்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பெருமளவிலான பொதுமக்கள் தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளனர்.

எல்லோரது மனங்களையும் நெகிழ வைத்த இந்நினைவுகூரல் நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன என்பது கூறிப்பிடத்தக்கது.

### முல்லைத்தீவில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிலாவத்தைப் பாடசாலையில் காலை 10 மணியளவில் முல்லைத்தீவுப் பிரதேச முன்பள்ளி, கல்வி மேம்பாட்டுத் தலைவர் சுரேஸ்குமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. பொதுச்சுடரினை பங்குத் தந்தை சரா அடிகளார் ஏற்றி வைக்க தேசியக்கொடியினை கடற்புலிகளின் முல்லைப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சிறார்களினதும், ஆசிரியர்களினதும் படங்களுக்கு முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலர் நினைவுச் சுடர்கள் ஏற்றி மாலைகள் அணிவித்து மலர் அஞ்சலிகளையும் நிகழ்த்தியுள்ளனர்.

### வடமராட்சியில்

இதேபோன்று வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் நினைவுகூரல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இந் நிகழ்வில் பொதுச்சுடரினை இலங்கை பாதுகாப்பு நிதிய அமைப்பின் தலைவர் பேரின்ப நாதன், வடமராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தலைவர் துரை சத்திய சீலன் உட்பட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர்களும் ஏற்றினர். இதனைத் தொடர்ந்து படங்களுக்கு நினைவுச் சுடர்களை பெற்றோர்கள் ஏற்றிவைத்து மலர் மாலைகளையும் அணிவித்தனர். இதனை அடுத்து மலர் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. தொடர்ந்து நினைவுரைகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள், போராளிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

### கிளிநொச்சியில்

விசுவமடுப் பிரதேசத்திலும் கல்லாறு என்ற கிராமத்தில் அமைந்துள்ள சாந்த முன்பள்ளி மைதானத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இன் நிகழ்விலும் முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள், போராளிகள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவில்

வவுனியா நகர்ப்புறத்தில் உள்ள சுத்தானநத இந்து இளைஞர் மண்டபத்தில் காலை 10 மணியளவில் வவுனியா தெற்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசபாதம் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந் நிகழ்வில் நினைவுச் சுடர்களை முனபள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஏற்றினர். போராளிகள் பொதுமக்கள் என அநேகமானவர்கள் கலந்துகொண்டனர். இதனைத்தொடர்ந்து சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா. சேனாதிராசா, செட்டிக் குளம் முன்பள்ளிக்கல்வி மேம் பாட்டுத் தலைவர் அருட்திரு தேவாகரன், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையப் போசகர் நாதன், சிங்களப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் ஆரியவதி, முஸ்லிம் முன்பள்ளி ஆசிரியயை பர்மிளா ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

### அம்பாறையில்

அம்பாறை மாவட்டத்திலும் முன்பள்ளி ஆசிரியரின் பகுதிகளான மூன்று இடங்களில் நினைவு கூரல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ள்ன. மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியல் பிற்பகல் 2.30 மணிக்கு கல்முனை வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிபபாளர் எஸ். எம். இப்ராகிம் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்விலும் நூற்றுக் கணக்கான பொது மக்கள் கலந்து கொணடனர். தலைவரின் தலைமை உரையில் இந் நினைவு நாளுக்கு வருகை தந்த அனைவரையும் வேதனையுடன வரவேற்று இறந்த ஆசிரியர்கள் மற்றும சிறார்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்ததுடன் அவர்களின் ஆத்மா சாந்தி பெறவும வேண்டினார்.

அவரது தலைமை உரையினைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு மேலாளர் கா.கணேசலிங்கம் அவர்கள் தனது உரையில், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்பு பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் உரையாற்றியதுடன் அழிவானது ஒரு ஆரம்பத்தின் ஆசீர் வாதமாகவும் இருக்கும் எனவும் சிறார்களுக்காக தங்களை அர்ப்பணித்து சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்கள் தெய்வத்திலும் மேலானவர்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அவர்களின் ஆத்மா சாந்திபெற வேண்டுமென்றும் உயிர் நீரத்த அனைவரினதும் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டு முன்பள்ளிச் சிறார்களுக்கு விஞ்ஞானக் கல்விக் கொள்கைகளை வளர்க்கவேண்டும் என்றும் அதற்காக அனைவரினதும் ஒத்துழைப்புக்கள் தேவை என்றும் ஆழமான கருத்துக்களுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களோடு விபரித்தார்.

உயிர் நீர்த்த ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி அவர்கள் அனைவரும் கேள்விக் கணக்கின்றி சொர்க்கவாசல் அடைவார்கள என்று தனது குர்ஆன்னில் உள்ளது என மௌலவி அன்சார் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து பெற்றோர் சார்பில் மருதமுனையைச சேர்ந்த ஏ. கமஸ்த்தீன் இறந்த மருதமுனையை சேர்ந்த இரண்டு ஆசிரியர்களின் சேவையைப பாராட்டி தெளிவாக உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து அரபுக் கல்லூரி அதிபர் அல்பிஸ் நிஸ்விது ஆப் பிரார்த்தனை செய்தார்.

மற்றுமொரு நினைவு கூரல் நிகழ்வு கல்முனை ராமகிருஸ்ணா மிசன் வித்தியாலயத்தில பி.ப 3.30 மணிக்கு அப்பாடசாலை அதிபர் திரு. என். நாகராசா அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்விலும் முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் பொதுமக்களென பலர் கலந்து கொண்டனர்.

இந்து சமய மதகுருவும் அதனைத் தொடர்ந்து முன்பள்ளி மேம்பாட்டு நிலைய செயலாளர் கா. கணேசலிங்கம், மௌலவி அன்சார் மௌலானா, கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம்.இப்ராகிம் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் பீர் முகமட், பாண்டிருப்பு மகாவித் தியாலய அதிபர் திருமதி ஆ. பேரின் பராசா, மாமாங்க வித்தியாலய அதிபர் வெஞ்சவன் விவேகானந்தா வித்தியாலய அதிபர் திருநாவுக்கரசு நாவ லர் வித்தியாலய அதிபர் கோபாலபிள்ளை ஆகியோரும் முன்பள்ளி ஆசிரியர் சார்பாக ஒருவரும், முன் பள்ளி மாணவர் சார்பாக உயிர் நீர்த்த முன் பள்ளி ஆசிரியையின் மகனும் நினைவுச் சுடர் ஏற்றி வைத்தனர்.

பாண்டிருப்பு மகாவித்தியாலய அதிபர் திருமதி ஆ. பேரின்பராசா ஆழிப் பேரலை பற்றியும், அதன் தாக்குதலில் துவண்டு போயிருக்கும் மக்களின் மனநிலை பற்றியும், அதிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முறை பற்றியும், ஆசிரியர் தொழிலின் மகத்துவம் பற்றியும், தனக்குத் தெரிந்த கிருஸ்ண வேணி என்ற முன்பள்ளி ஆசிரியர் பற்றியும் நினைவுரை நிகழ்த்தினார்.

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய அதிபர் கோபாலபிள்ளை முன்பள்ளி கல்வியின் மகத்துவம் பற்றியும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் செயற்பாடுகள், இன மத பேதமின்றி முன் மாதிரி இருப்பது பற்றியும் விபரித்து உரையாற்றினார். விவேகானந்தா அதிபர் திருநாவுக்கரசு உரையாற்றும்போது மக்கள் ஆழிப்பேரலையின் கோரப்பிடியிலிருநது இன்னும் தெளிவு பெறவில்லையெனவும் இந்நிகழ்வு இன, மத பேதமின்றி ஒற்றுமையின் பாலமாக இருப்பதினை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது எனவும் அத்துடன இரவு, பகல் பாராது தமிழர் புனரவாழ்வுக்கழகமானது மக்களுக்காற்றிய சேவையினையும் பாராட்டி, தனக்கு நன்கு தெரிந்த முன்பள்ளி ஆசிரியையான சாந்தகுண சேவையினைப் பாராட்டியும் நினைவுரை ஆற்றினார்.

சனசக்தி நிறுவன முகாமையாளர் ஜெயராசேந்திரன் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையினைப் பாராட்டும்போது, அரசாங்கமோ, வேறு முன்பள்ளி நடத்தும் நிறுவனங்களோ நினைத்துச் செயற்படுத்தாத விடயத்தினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையததின ருக்கும் இன்றைய நாளில் இந் நினைவு கூரல் நடத்தியிருப்பதானது பாராட்டுக்குரியது என்றும் அதற்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.

மூன்றாவது கட்டமாக நிந்தவூர் இமாம் கஸஸாலி மகாவித்தியாலயத்தில் பிற்பகல 4.30 மணிக்கு ஆரம்பமானது. இந்நிகழ்விலும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கல்விமான்களும் சமூக சேவையாளர்களும் வருகை தந்தனர். கல்முனை வலய முன் பள்ளி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வி சித்தி நஜீமா தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது. விபுலானந்த இல்ல முகாமையாளர் கைலாசபிள்ளையினால் முனபள்ளி ஆசிரியர்களானவர் ஆரம்பக்கல்வி ஆணிவேர் போல எனவும், அடிப்படைக் கல்விப் பண்புகளையும், அதன் பலா பலன்களையும, நல்ல இதயங்களையும் உருவாக்கிய முன்பள்ளிக் கல்வி ஆசிரியர்கள் என்றுமே மறக்கக் கூடியவர்கள் அல்ல என உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து மௌலவிகளால் யாசின் ஓதப்பட்டு உயிர் நீத்த அனைவருக்குமான துஆப் பிரார்த்தனை சலவாத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (க)

# யசூசி அகாசி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத்தூதுவர் யசூசி அகாசி நேற்று அதிகாலை இலங்கைக்கு வந்தடைந்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பினனர் சமாதான நடவடிக்கைகள் மற்றும் நிகழ்கால நிலைமைகள என்பன குறித்து, அகாசி அரசுத் தரப்பினருடனும், ஏனைய தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்துள்ள அகாசி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் ஏனைய உயர்மட்டத் தலைவர்கள் ஆகியோரை சந்தித்து சமாதானம் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவார் என்று ஜப்பானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 13ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் ஜப்பானின் விசேட சமாதானத்தூதுவர் யசூசி அகாசி கிளிநொச்சிக் குச் சென்று தமிழீழ விடுதலைப புலிகளின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதனைத்தவிர ஆழிப்பேரலை அனர்த்ததத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் மறறும் தென்பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# இளவரசர் சாள்ஸ் இலங்கை வருவார்

(கொழும்பு)

பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் எதிர்



வரும் 28ம் திகதி இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஓரிரு பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவுள்ள இளவரசர், இங்கிலாந்து மனனர் பரம்பரையின் சார்பில் புனர்நிர்மாணப் பணிகளுக்கு தனது உதவிகளையும் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,இலங்கையின் எந்தப் பகுதிக்குச் செல்லவுள்ளார் என்பது இதுவரை முடிவு செய்யப்படவில்லை. இலங்கையில் இருந்து புறப்பட்டு அவுஸ்திரேலியா செல்லும் அவர், பிஜி, நியூசிலாந்து போன்ற பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது. (க)

# நிர்மாணம்

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் 2 ஆம் மாடிக் கட்டட வேலைகள் நடை பெற்று வருகின்றன. கடந்த வருடம் கட்டப்பட்ட இக் கட்டடத்தில் தொடர்ச்சியாக இவ்வருடம் 2ஆம் மாடி கட்டப்பட்டு வருகிறது.

கல்வியமைச்சின் ஜி.வி.-2 திட்டத்தின் கீழ் இது சுமார் 50 இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்டு வருகிறது. (ப-49)

# மிதக்கும் வைத்தியக் கப்பல் குறித்த சர்ச்சை தொடர்கிறது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கடந்த சனிக்கிழமையன்று கிரேக்க நாட்டு மிதக்கும் வைத்தியக் கப்பல் திருகோணமலைக்கு வந்தது.

இந்தக் கப்பலில் உள்ள வைத்தியசாலையில் நோயாளிகளை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவிருந்தது.

ஆனால் பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்த வைத்தியசாலைக்கு நோயாளிகளை வேறோரு வைத்தியசாலையின் பரிந்துரை இனறி நேரடியாக அனுமதிக்க முடியாது என இராணுவம் கூறிவருவதன் காரணமாக இந்த சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியவில்லை என இலங்கைக்கான கிரேக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு அதிகாரிகளும் இணங்கிக் கொண்டமைக்கு ஏற்பவே அதில் குறிப்பிட்ட கப்பலில் வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு இலங்கைக்கு எடுத்து வரப்பட்டது.

இந்த நிலையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக தாம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை அரசின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்னாயக்காவிடம் இதுகுறித்துக் கருத்துக் கேட்டபோது, இவ்விடயம் தொடர்பாக தன்னிடம் விபரமெதுவும் இல்லை என்றும் இந்தத் தகவல்கள் தனக்கும புதியனவாக உள்ளன என்றும் தெரிவித்தார். (க)

## இன்று ஒரு தகவல்

# நெஞ்சுவலி

ஒருவர் மிகவும் பயந்துபோய் வந்துகொண்டிருந்தார். "ஏன் சார் இப்படி ஒரு மாதிரியாக வந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றார் இன்னொருவர். "நெஞ்சில் வலிக்கிறது சார்... அது தான் பயமாக இருக்கிறது சார்" என்றார் அவர். "நெஞ்சு என்று ஒன்று இருந்தால் வலி என்று ஒன்று இருக்கத்தான் செய்யும்" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் போனார் அவர். "அந்த வலி அவரவர்க்கு வந்தால் தான் தெரியும்" என்று நினைத்து விட்டார் அவர்.

"பொதுவாக நெஞ்சு வலி வந்தால் எல்லோருக்கும் பயமாகத்தான் இருக்கும். அந்தப் பயத்திற்கு என்ன காரணம் என்றால் அது மாரடைப்பாக இருக்குமோ என்ற நினைப்பு தான். ஒரு முக்கியமான விடயத்தை நாம் எல்லோரும் மனதில் வைத்திருக்கவேண்டும். நெஞ்சுவலி வந்தால் அதற்குக்காரணம் மாரடைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. நெஞ்சுப் பகுதியில் வலி வந்தால் உடனே அது இதய வலிதான் என்று முடிவு செய்து விடக்கூடாது.

நமது நெஞ்சுக்குள் இதயம் மட்டுமா உள்ளது? நுரையீரலும் அங்கு தான் உள்ளது. எலும்புத்தசைகள் உள்ளன. விலா எலும்புகள், இரத்தக் குழாய்கள் உள்ளன. கொஞ்சம் கீழே மண்ணீரல் உள்ளது. கல்லீரல், இரைப்பை, பித்தப்பை என்பன உண்டு.

அங்கெல்லாம் ஏதாவது நோய்வந்தாலும் கூட நெஞ்சுப் பகுதியில் வலி வரலாம் அதனால் அவசரப்பட்டு எதையாவது நினைத்துக் கொண்டு மனைதைக் குழப்பிக்கொள்ளக்கூடாது. நுரையீரலில் உணர்ச்சி நரம்பு முடிச்சுக்கள் இல்லை. அதனால் அங்கே நோய் வந்தாலும் கூட நுரையீரல் சவ்வுப் பகுதியில் அழற்சி ஏற்பட்டுள்ளது. மூச்சை உள்ளே இழுக்கும் போது ஒவ்வொருமுறையும் வலி ஏற்படும். ஏனென்றால் அந்தப் பகுதியில் உணர்வு நரம்பு முடிச்சுகள் அதிகம் உள்ளன.

நெஞ்சுவலிக்குப் பலகாரணங்கள் உள்ளன. நெஞ்சுப் பகுதியில் உள்ள தசையில் அழற்சி உண்டானால் வலி வரலாம். அமீபாவினால் உண்டாகும் கல்லீரல் கட்டிகள் நுரையீரலுக்குள்ளே ஏற்படும் காற்றழுத்தமாறுபாடு, மார்பெலும்பு முறிவு அல்லது அழற்சி போன்றவற்றினாலும் வலிவரலாம். மார்பு எலும்பின் தன்மையில் ஏதாவது மாற்றம் உண்டானாலும் கூட இந்த வலி வரலாம். தண்டுவடத்தில் வலி உண்டானால் அதன் பிரதிபலிப்பாகக்கூட மார்பில் வலி வரலாம். இதயத்தசையில் ஏற்படும் மாற்றங்கள் கூட நெஞ்சுவலியை உண்டாக்கலாம்.

இப்படியெல்லாம் பல காரணங்கள் இருக்கும் போது நெஞ்சில் வலிவந்தவுடன் **Heart attact** தான் வந்துவிட்டது என்று நினைத்து பயந்து விடக்கூடாது. சரி... அப்படியென்றால உண்மையான **Heart attact** வந்தால் அது எப்படி இருக்கும்?

இதயத்தமனியில் அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுவதனால் இதயத்தசை, ஒட்சிசனும் போதுமான இரத்தமும் இல்லாமல் அதிர்ச்சிக்கு உள்ளாகிறது. அது தான் **Heart attact** நெஞ்சு வலிமாதிரியே இருக்கும். வலி அறிகுறிகள் உண்டு. இருந்தாலும் வலியின் தன்மை நீண்டநேரம் இருக்கும். மணிக் கணக்காகவும் நாள் கணக்காகவும் நீடித்திருக்கும். இரத்த அழுத்தம் முதலில் அதிகமாகவும் பின்பு குறைவாகவும் இருக்கும். உடல் முழுவதும் வியர்க்கும். படபடப்பு, அமைதியின்மை, தாங்கமுடியாதவலி போன்றவை அதற்கு அடையாளம். இதயத் துடிப்பு சீராக இருக்காது. துடிப்பின் அளவு குறையும். மூச்சை இழுத்து விடுவதில் சிரமம் இருக்கும்.

இதயநோய் வராமல் இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற விபரங்களை ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இன்றைய தகவல் என்னவென்றால் உடனே பயந்துபோய் விடக்கூடாது என்பது தான். ஏனென்றால் பயமே பாதி வியாதிக்கு சமம்.

ஒருவருக்குத் திடீர் என்று நெஞ்சுவலி வந்துவிட்டது பயந்து போய்விட்டார். உடனே டாக்டருக்கு போன் செய்தார். வைத்தியம் செய்வதற்கு ஒருவர் வந்து சேர்ந்தார் கையில் ஒரு மருந்துப்பெட்டியுடன்! நோயாளி உள்ள அறைக்குள் போய் கதவை சாத்திக்கொண்டார். வேறுயாரும் உள்ளே வரக்கூடாது என்று கூறிவிட்டார்.

மற்றவர்கள் வெளியே உட்கார்ந்திருந்தார்கள். கொஞ்ச நேரம் ஆனதும் அவர் வெளியே வந்து "ஒரு ஆணி இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டார். அது எதற்கென்று யோசித்தார்கள். இருந்தாலும் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்டு கதவை மூடிக்கொண்டார். உள்ளே கடாமுடாவென்று ஏதோ சத்தம்... கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் கதவைத் திறந்து கொண்டுவந்தார்.

"ஒரு சுத்தியல் இருந்தால் கொடுங்கள்" என்றார். அதையும் கொடுத்தார்கள். மறுபடியும் கதவை மூடிக் கொண்டார். மறுபடியும் கடாமுடாவென்று உள்ளே சத்தம். வெளியே உட்கார்ந்திருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 15 நிமிடம் கழித்து "அப்பாடா வெற்றி சக்ஸஸ்" என்று சொல்லிக் கொண்டே வெளியேவந்தார்.

"என்ன ஆயிற்று ?"என்று எல்லோரும் மிக்க ஆர்வமாகக் கேட்டார்கள். "நான் எடுத்துக்கொண்டு வந்த மருந்துப்பெட்டியைத் திறந்துவிட்டேன் இனிமேல் தான் வைத்தியத்தை ஆரம்பிக்கவேண்டும்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நாடாளுமன்ற அமர்வுகளில் அமளிதுமளி;

# தமிழ் கூட்டமைப்பு கறுப்புப்பட்டியுடன் சென்றது

## சுனாமி பற்றிய விவாதத்தை ஜே.வி.பி பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான விவாதத்தில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஜே.வி.பி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் நேற்று முன்



தினம் காலை ஆரம்பமானபோது ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விசேட உரையொன்றைஆற்றும் போது இதனைத் தெரிவித்தார்.


ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கம் கூட்டமைப்புக் கட்சி என்ற அடிப்படையில் இணைந்து செயற்பட்டிருக்கவில்லை. இது குறித்து ஆயிரம் விமர்சனங்களை முன் வைப்பதை விட அமைதியாக இருப்பது கௌரவமானது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்ப அபயவர்த்தன நாட்டை வழமை நிலைக்குக் கொண்டுவர முறையான திட்டம் ஒன்று அவசியம் எனக் கூறினார்.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் முறையான முகாமைத்துவம் இல்லை என்பதை ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆற்றிய உரையின் மூலம் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து சபை நடவடிக்கைகள் சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றத்திற்குள் எதிர்ப்பைத் தெரிவித்தபோதே இந்நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பாராளுமன்றத்திற்கு வருகை



தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்பட ஆறுபேரின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து அவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து வந்து தமது எதிர்ப்பை தெரிவிததனர்.

பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்திற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சபாநாயகரின் ஆசனத் திற்கு முன்னால் அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆசனங்களில் அமர்ந்ததை அடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆற்றிய விசேட உரையில், இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இதுபற்றிய அறிக்கையொன்று விரைவில் வெளியிடப்படும் என்றார்.

அங்கு உரையாற்றிய மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன், மட்டு. அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் படுகொலைச் சம்பவமானது சமாதான நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்றும் அவர் கூட்டிக்காட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பன் தலைவர் இரா. சம்பந்தன் இந்தப் படு கொலைச் சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவ முகாம்கள் இரண்டிற்கு இடைப்பட்ட பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமையே இதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்தார். அதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தபோதே சபாநாயகர் பாராளுமன்றத்தை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். (ப-4)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை இலங்கை வந்தடைந்தார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருந்த சந்திரிகா, இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதோடு பாகிஸ்தான் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அந்நாட்டு உயர்மட்டப் பிரதிநிகளுடனும் கலந்துரையாடினார்.

பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசீசை முதலில் சந்தித்த சந்திரிகா, பின்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஆகியோரும் இவ்விஜயத்தில் சந்திரிகாவுடன் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் பொருளாதாரம், கலாச்சாரத்துறைகளில் இருதரப்பு உறவுகளை வளர்ப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. இவ்விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இருநாடுகளுக்கும் இடையிலான கல்வி, விவசாயம், உல்லாசப் பயணத்துறை, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பரஸ்பர அபிவிருத்தி பற்றிய பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கைக்கான ஏற்றுமதி கடன் வசதி நிதியாக பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் இணைந்த பொருளாதார ஆணைக்குழுவிற்கான அடுத்த கூட்டத்தை கொழும்பில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

### நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு

## தை மாதச் சம்பளக் கொடுப்பனவை முழுமையாக வழங்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச துறைகளில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகளது தைமாதச் சம்பளக் கொடுப்பனவுகளை முழுமையாக வழங்கும்படி திறைசேரியின் பிரதிச்செயலர் அறிவித்துள்ளார்.

அண்மையில் அரச துறையில் நியமனம் பெற்ற பட்டதாரிகள் நிர்வாகத் தடங்கல்கள் காரணமாக வெவ்வேறு திகதிகளில் தத்தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

இதனால், இவர்கள் தை மாதத்தில் கடமைக்குச் சமுகமளிக்காத தினங்களுக்குரிய சம்பளத்தை வெட்டாது தை மாதத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவுகளை இவர்களுக்கு முழுமையாக வழங்கும் படி திறைசேரியின் பிரதிச் செயலர் சகல அமைச்சுக்களுக்கும், மாகாணசபை பிரதம செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (ற-19)

# படுகொலைக்கு இடமளித்தால் பெரும் விபரீதம் ஏற்படும்

## கஜேந்திரன் எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் கொலை செய்யப்பட்டமைக்கு இலங்கை இராணுவத்தின் உளவுப் பிரிவினரின் திட்டமிட்ட தாக்குலே காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுனாமி பாதிப்பு தொடர்பான விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டதாகவும் எனவே அவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தமொன்றுக்குச் செல்லமாட்டார்கள் என்றும் அரசாங்கம் பகல் கனவு காண்கின்றது.

இந்த நிலையில் இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் அரசாங்கத்தின் பகல்கனவு கலைந்துபோகும்.

விடுதலைப்புலிகளின் பொறுமை நிலையைப் பயன்படுத்தி இராணுவத்தினர் தமது பழைய பல்லவியை பாட முனைகின்றனர். இவ்வாறான சம்பவங்களை இனிமேலும் மேற்கொள்ள அரசு அனுமதியளித்தால் பெரும் விபாதம் ஏற்படும் எனவும் கஜேந்திரன் எம்பி எச்சரித்தார். (த-104)

# லெப்.கேணல் கௌசல்யனுக்கு இன்று கிளி.இல் நினைவஞ்சலி

(கிளிநொச்சி)

மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப்ரினன் கேணல் கௌசல்யனின் நினைவஞ்சலி நிகழ்வுகள் கிளிநொச்சியில இன்று நடைபெறவுள்ளன.

மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட 4 மாவீரர்களினதும், நாட்டுப்பற்றாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரநேரு ஆகியோரினதும் நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம், வட்டக்கச்சி மாநகர மண்டபம்,அக்கராயன் இல.01 பாடசாலை, பளை மத்திய கல்லூரி, பூநகரி வாகனடி, நரன்புரம் மகாவித்தியாலயம் மற்றும் முழங்காவில் மாவீரர் மண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியத்தினர் செய்துள்ளனர். (ற-4)

# நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

## யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத் திட்டம்.

## (நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது.)

# கேள்வி அறிவித்தல் - இல. 02

## சிறுகுளங்களைப் புனரமைத்தல்

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றுள ளது. இதன்கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில விபரிக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறுகுளங்களைப் புனரமைக்கும் வேலைகளுக்காகப் பகிரங்கக் கேள்விகள் இத்தால் கோரப்படுகன்றன.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருனராக குறிப்பிடப்படும் நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு செயலாளருக்காக யாழப்பாணம் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பெறறி வைக்கப்பட்ட கேள்விகள் இக்ராட் ஒப்பந்தக் காரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிட மிருந்தும் கோரப்படுகின்றன.

3. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 590/-ப்படி பணமாக செலுத்திப் 14-02-2005 இல் இருந்து 25-02-2005 பிற்பகல் 15.00 மணி வரை வேலை நேரங்களில் மேற்படி "நோராட" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந தங்களுக்கு ஒப்பந்தக்காராகள் கேளவ கோரமுடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் "நோராட்" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை ப பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக கொண்டிருக்கவேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கையினால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனா ல் தகுதியற்றவா என்ற பிரகடனத்தினைக் கொண்டிருத்தல் ஆகாது.

6. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்னையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமா க நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில தருனர்களிடமிருந்து/ அல்லது உசாவலர்களிடமிருந்து சானறுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல்வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல் வேண்டும்.

7. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களை "நோராட்" அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 021-222 6752.

8. சமர்ப்பிக்கப்படும் கேள்வகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு, "மாவட்ட செயலாளர்/அரச அதிபர், மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 28-02-2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக இரு பிரதிகளாக அனுப்புதல்வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப்பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

9. அதே தினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

10. கேள்விகோருவோருக்கு இதன்போது ஏற்படும் ஆகு செலவுகளுக்கு தொழில் தருநர் பொறுப்புடையவர் ஆகார்.

### விபர அட்டவணை

| இல | வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திரப் பிணை வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பணம் வற் வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | பண்டாரக்குளம், நல்லூர் (JPO/WC/PO/1/33) | 09 | 17,250.00 | 590.00 |
| 2. | மக்கியாகுளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/42) | 09 | 16,800.00 | 590.00 |
| 3. | நாயன்மார்கட்டுக்குளம், நல்லூர் (JPO/WC/PO/1/34) | 09 | 12,400.00 | 590.00 |
| 4. | இலந்தைக்குளம், கொழும்புத்துறை மேற்கு (JPO/WC/PO/1/06) | 09 | 19,100.00 | 590.00 |
| 5. | சின்னக்குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/02) | 09 | 15,300.00 | 590.00 |
| 6. | வண்ணான்குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/07) | 09 | 12,000.00 | 590.00 |
| 7. | பிள்ளையார் குளம் சுண்டுக்குளி (JPO/WC/PO/1/32) | 09 | 6,500.00 | 590.00 |
| 8. | வீரமாகாளிஅம்மன் கோயில்குளம் நல்லூர் (JPO/WC/PO/1/29) | 09 | 7,700.00 | 590.00 |
| 9. | பிரப்பன்குளம், அரியாலை மேற்கு (JPO/WC/PO/1/35) | 09 | 12,300.00 | 590.00 |
| 10. | வண்ணான்குளம், திருநெல்வேலி (JPO/WC/PO/1/22) | 09 | 12,800.00 | 590.00 |

12.02.2005

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

க.கணேஸ்
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/1076)

## ஆரம்பம்

(பொன்னாலை)

தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தில் புதிதாக விளையாட்டுக்கழகம் ஒன்று கடந்த 2 ஆம திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுக் கழகத்திற்கு தொல்புரம் மத்திய சக்தி விளையாட்டுக் கழகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. (ப-49)

## கொடுப்பனவு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 3ஆம் வருட உள்ளகப்பயில்வு ஆசிரிய மாணவர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு நாளை சனிக்கிழமை வழங்கப்படும் என பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார். (ற)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமம் ஞாயிற்றுக்கிழமை தோறும நடாத்திவரும் வாராந்த ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணியளவில் "அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கதது அரவணைப் பள்ளியானே" என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ்.கே.என். தவராஜா பி.ஏ. அவர்கள் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார். (ப-35)

## இலவச கணனி பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வி நிறுவனங்களில் உயர் கலவியைத் தொடரும் மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையானது இலவசக் கணனிப் பயிற்சி வகுப்புகளை அடுத்தமாதம் ஆரம்பிக்க இருக்கிறது.

இவ் வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் இவ் வகுப்புகளுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் பேரவை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பதிவு செய்து உடனடி உதவிகளைப் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் மாணவர் பேரவையில் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்குத தவறாது சமூகமளிக்குமாறு பேரவையின பொறுப்பாளர் ந.கண்ணன் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222 3942, 021-222 3768 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# மூத்தோரை மதிக்கும் மனநிலை இளையோரிடம் அருகிச் செல்கிறது

## சமூகநோக்கர்கள் ஆதங்கம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெரியோர்களை மதிக்கும் பழககமும், பெரியோர்களுக்கு உதவிசெய்யும் பணபாடும், மனோபாவமும் பெருமளவில் குறைந்து காணப்படுகின்றது என சமுதாய நலன் விரும்பிகள் ஆதங்கபபட்டு வருகின்றனர்.

மாணவர்கள் மத்தியில் காணப்படும் இத்தகைய குறைபாடுகளைப் போக்கும் பணியில் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கூடியளவு கவனம் செலுத்த வேண்டும் என்றும், இல்லையேல் இந்தநிலை எதிர்காலத்தில இன்னமும் கூடிய அளவில் அதிகரித்துக்கொள்ளும் என்றும் கூறபபடுகின்றது.

சமுதாயத்தின் விலைமதிக்க முடியாதவர்களாகக் கருதப்படும் பெரியோர்கள் மற்றும் முதியவர்கள் எமது சமுதாயத்தின் பெரும் சொத்தாவார்கள். அத்தகையவர்களை மாணவர்கள் மதித்து வாழப் பழகவேண்டும். அதற்கு ஏற்றவகையில் ஆசிரியர்கள் வேண்டிய நல்லொழுக்கங்களையும் பழக்க வழக்கங்களையும் மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும் என்றும் சமுதாய நலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றார்கள் எனத் தெரியவருகின்றது. (ப-16)

# தொழில் சார் விபத்துக்களை தவிர்க்க தொழில் திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு உயிர் ஆபததுக்கள், பாதிப்புக்கள் ஏற்படக்கூடியவகையில் இயந்திரங்கள் மற்றும உபகரணங்களைப் பொருததியிருக்குமானால் அந் நிறுவன உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதகப் பொறியியலாளர் அறிவுறுததியுள்ளார்.

தொழிறசாலைகள் அனைத்தும் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டதத்திற்கு அமைவாக இயங்க வேண்டும் எனவும் இவர் அறிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இயங்காத மூன்று ஆலைகள் யாழ். மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதகப் பொறியியலாளரால் இனங்காணபபட்டு அவ் ஆலைகளின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்களையும் உயிரிழப்புக்களையும் தடுப்பதற்காக யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்தினால் கடந்த இரண்டாம் திகதி தொழில்சார் பாதுகாப்பு சுகாதார சேமநல தகவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு இவ் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இடப்பற்றாக்குறை காரணமாக 2003ஆம் ஆண்டு இது இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 2005ஆம ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் நிலையத்தில் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு எவ்வாறு விபததுக்கள் ஏற்படுகின்றது, இதனைத தடுப்பதற்கான வழி முறைகள் மற்றும் தொழிலாளாகள் அணிய வேண்டிய பாதுகாபபுக் கவசங்கள் என்பன தொடர்பான விபரங்கள் மற்றும் புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப பட்டுள்ளன. (ற-19)

# இறைவன் தரும் சோதனைகளால் பெரும் சாதனைகள் படைக்கலாம்

படிப்பவர்களுக்கும், பட்டம் பதவிகளில் உயர்வு வேண்டு



பவர்களுக்கும் நடைபெறும் சோதனைகள் பல ரகமானவை. சோதனை வரப்போகின்றது என்பதையும், சோதனை கிட்டிவிட்டதென்பதையும் தெரிந்துகொள்ளும் போதே மனதில் ஒருவித பதட்டமும், எதிர்பார்ப்புக்களும் ஏற்படுகின்றன. இது மக்களுடைய அன்றாட வாழ்வில் ஏற்படும், காணப்படும் சோதனையாகும்.

வாழ்க்கையில் இத்தகைய சோதனைகளைவிட இறைவனை வழிபடுவோருக்கும், அவ்வப்போது பல்வேறு சோதனைகளை ஏற்படுத்துகின்றான் இறைவன் என்பதைப் பலரும் பேசக் கேள்விப்படுகின்றோம். படிப்பவர்கட்கும், தொழில்துறைப் பதவிகளில் உயர்வுகளை வேண்டுபவர்கட்கும் ஏற்படும் சோதனைகளை விட இறைவனை நம்பிவழிபடுபவர்கட்கு ஏற்படும் சோதனைகள் இவ்வுலகியல் வாழ்வில் பல தரப்பட்ட நல்ல அனுபவங்களை ஏற்படுத்துவனவாகவும், மற்றையோருக்கும் நல்ல பாடங்களாக அமைவனவாகவும் காணப்படுகின்றன.

## வெள்ளிநற்சிந்தனை

எனவே சோதனைகள் என்பவை வேதனைகளை ஏற்படுத்தி மக்கட்கு மகத்தான சாதனைகளைத் தருவனவாகவே அமைகின்றன. இந்து சமயத்திலே சிறப்பானதாகக் காணப்படும் இதிகாசங்கள், புராணங்கள் பலவும் ஆண்டவனுடைய அவதாரங்களாகத் தோன்றியவையே. பலதரப்பட்ட சோதனைகட்கு ஆளானமை பற்றி வெகு சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

தெய்வீக அவதாரங்களைப் பற்றியெல்லாம் நாம் நன்கு சிந்திக்கும் போது, இவ்வுலக வாழ்க்கைக்கு மக்கட்குத் தேவையான அருமையான நல்ல பாடங்களையும், கருத்துக்களையும், கற்றுணர்ந்து தாமும் நல்வழிநாடிப் பிறரையும் நல்வழிப்படுத்தும் உயர்ந்த அனுபவக் கருத்துக்களையெல்லாம் அறிவுறுத்துவனவாகவே உள்ளன.

உதாரணமாகத் திருவிளையாடற் புராணத்திலே காணப்படும் கதைகளும், பாரதம், இராமாயணம், கந்தபுராணம் போன்ற பல்வேறு பழம் பெருமைமிக்க நூல்களில் காணப்படும், எடுத்துக் கூறப்படும் கதைகளும், கருத்துக்களும், காலத்தால் அழியாத அரும்பெரும் உண்ஷமச் சிந்தனைத்தெளிவுகளை எமக்கு ஏற்படுத்தி நல்வாழ்வுகளை வழிகாட்டுவனவாகவேயுள்ளன.

மக்கள் தம் வாழ்கையை நல்வழிப்படுத்தவேண்டியே இறைவ்ன் பல்வேறு அவதாரங்களை எடுத்து, இவ்வுலக வாழ்வில் இப்படி! இப்படி! வாழ்ந்தால் எத்துணைப் பலாபலன்கள் விளையும் என்பதையும் எப்படி! எப்படி! வாழ்ந்தால் நல்வாழ்வும், நற்கதியுமடையலாம் என்பதையும் எடுத்துணர்த்தியுள்ளார்.

மக்கள் ஆணவத்தாலும், அறியாமையாலும் நெறிகெட்டு வாழ்வதால் எத்துணை துன்பங்கட்கு ஆளாக நேரிடுகின்றது. இத்தகைய துன்பங்களிலிருந்து விடுபட இறைவன் எப்படியெல்லாம் கருணைகாட்டி அருள் புரிகின்றான்.

**"நல்ல நயினார் நம்மை வருத்துவது**
**கொல்லவல்ல கொல்லவலப் பொல்லா வினைபோக்க"**

எனும் எம் ஆன்றோரின் அனுபவமொழி இறைவன் நமக்குத் தரும் சோதனைகள் நம்மை நல்வழிப்படுத்தவே என்பதை நன்கு உணர்ந்துவதாயுள்ளது.

**நீர்வைமணி**

மிகவும் சிரமப்பட்டுப் படிக்கும் பிள்ளைகள் சோதனைகளிற் சித்தியடைவது போலவே உள்ளன்புடன் இறைவனை வழிபடுபவர்கட்கும் வரும் சோதனைகள் இறையருளாலேயே நற்பேறுதரும் என்பதில் ஐயமில்லை.

இதனையே பின்வரும் பாடல் தெளிவுபடுத்துவதாயுள்ளது.

அல்லல் என்செயும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவணார்க்கு.
எல்லை இல்லாததோர் அடிமை பூண்டேனுக்கே. □

# 'சுனாமி' நிவாரணப் பணிக்காக நிதியுதவி வழங்கிய அமெ. சிறுமியை இலங்கைக்கு வருமாறு அழைப்பு

(கொழும்பு)

அமெரிக்காவைச் சேர்ந்த றெபேக்கா எனும் 11 வயது சிறுமி சுனாமி நிவாரணத்திற்காக தனது சார்பில் 5 அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க, இலங்கையர் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் விமானப்படைத்தளபதியும் தற்போதைய சமாதான செயற்பாட்டாளருமாகிய ஹரிகுணதிலக, றெபேக்காவையும், பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவரையும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்குமான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

10 முதல் 15 நாட்கள் நீங்கள் இங்கு தங்கமுடியும் என்று ஹரிகுணதிலக சிறுமி றெபேக்காவிற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒருவருக்காவது, ஒரு சிறுவருக்காவது, நீர் அனுப்பிய பணம் பயன்படவேண்டும் என உண்மையிலேயே எண்ணியதற்கு வெறும் நன்றி என்ற வார்த்தை மட்டும் போதியதல்ல. உமது தாராளமனப் பான்மையைக் கருத்தில் கொண்டு உம்மையும் உமது பெற்றோர்களில் ஒருவரையும் எமது செலவில் இலங்கைக்கு விருந்தாளிகளாக அழைக்கிறோம். நீங்கள் உங்களது ஆடைகளைக் கொண்டு வந்தால் போதுமானது. உங்களை நானே விமானநிலையத்தில் வைத்து பொறுப்பேற்று மீண்டும் அனுப்பியும் வைக்கிறேன்.

இதற்கான ஒழுங்குகளை உங்கள் நாட்டிலுள்ள எமது தூதரகம் மேற்கொள்ளும் எனவும் ஹரிகுணதிலக அனுப்பி வைத்துள்ள மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-6)

# அவசரகால நிலை நீடிப்பு குறித்து இன்று பாராளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

சுனாமிப் பேரலையின் காரணமாக 14 மாவட்டங்களிலும் அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதம் இன்று பாராளுமன்றில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றக் கூட்டத் தொகுதியில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

'சுனாமி' அனர்த்தத்தின் பின்னர் ஜனாதிபதியால் இந்த அவசரகாலச் சட்டம் நாட்டின் 14 மாவட்டங்களில் அமுலாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டது.

அரசியல் யாப்பின் 155 ஆவது சரத்தின் படி அவசர காலச்சட்டமானது அமுல்செய்யப்பட பாராளுமன்றத்தின் அனுமதி தேவையாகும்.

இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டுமாயின் 14 நாட்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவேண்டும் என்பது அரசியல் யாப்பின் படி தெரிவிக்கப்பட்ட விடயம் என்பது குறிப்பிடத்தக்கது.(ற-4)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் கறுப்பு பட்டியுடன் சபையில்

(கொழும்பு)

சுனாமிப் பேரலை அனர்த்தம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கறுப்புப்பட்டி அணிந்தவாறு சென்றனர்.

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட ஆறு பேரினதும் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே அவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதேவேளை, பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற சுனாமிப் பேரலை விவாதத்தில் விமல் வீரவன்ச உரையாற்றிக்கொண்டிருந்தபோது அவ்வுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சபாநாயருக்கு முன்பாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனையடுத்து சபாநாயகர் கே.எம்.லொக்குபண்டார சபை நடவடிக்கைகளை 10 நிமிட நேரம் ஒத்திவைத்தார்.

மீண்டும் சுனாமி ஆழிப்பேரலை தொடர்பான விவாதம் நடைபெற்றது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இராசம்பந்தனால் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றும் பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், கஜேந்திரன், சுரேஷ்பிரேமச்சந்திரன், ஈழவேந்தன், கனகரத்தினம், சிவாஜிலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (ச)

# வாத்தியக்கருவி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(பொன்னாலை)

வலி-மேற்கு சங்கானைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் வாத்தியக் கருவி பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் இசைவகுப்பில் இணைந்து பயிலவிரும்பும் பாடசாலை மாணவர்கள் உட்பட வளர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கிற்றார், ஓகன், மிருதங்கம், புல்லாங்குழல் ஆகிய வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவர்கள் இம் மாதம் 18 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புபவர்கள் பயிலவிரும்பும் துறையொன்றைக் குறிப்பிட்டு கலாசார அலுவலர், பிரதேச செயலகம், வலி-மேற்கு- சங்கானை என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-49)

## உதவி வழங்கல்

(மருதங்கேணி)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 6 ஆயிரத்து 138 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றக் கொடுப்பனவாக 5ஆயிரம் ரூபா, 2 ஆயிரத்து 938 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் வீட்டுப் பாத்திரங்கள் வாங்குவதற்காக 2 ஆயிரத்து 500 ரூபா, 3 ஆயிரத்து 443 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (ப-35)

## மண் அகழ்வு

(மருதங்கேணி)

துன்னாலை வல்லிபுரம் பகுதிகளிலுள்ள தனியார் காணிகளில் இரவு நேரங்களில் சட்டவிரோத மண் அகழ்வு நடைபெறுகிறது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப் பகுதிச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ப-35)

## விநியோகம்

(மருதங்கேணி)

மந்திகையிலுள்ள அரசினர் கால்நடை வைத்திய அலுவலகத்தில் (நல்லின பேடு) கோழிக்குஞ்சுகள் வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படவுள்ளது.

தேவையானவர்கள் கால்நடை வைத்தியசாலையில் பதிவு மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் அறிவித்துள்ளார். (ப-35)

## பொது மக்கள் சிரமம்

(பொன்னாலை)

சுழிபுரம் - பறாளை ஈஸ்வர விநாயகர் கோயில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் போக்கு வரத்துச் செய்ய பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முக்கியமான வீதிகளில் ஒன்றான இவ்வீதியால் பல தரப்பட்ட வானங்களும் சீராகப் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது.

இவ் வீதியின் இருமருங்கும் பலத்த சேதமடைந்திருக்கின்றது.

சுழிபுரம் பிரதேச சபைப் பிரிவிற்குட்பட்ட இவ் வீதியை திருத்தியமைக்குமாறும் பல தரப்பட்ட அவ்வூர் அமைப்புக்களும் தொடர்ச்சியாகப் பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (ப-49)

## திறப்பு விழா

(பொன்னாலை)

சரசாலை-தெற்கு மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொண்டு கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைக்கவிருக்கின்றார். (ப-49)

## பொலிஸார் நடவடிக்கை

(சங்கானை)

சங்கானைச் சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸார் போக்குவரத்துச் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு ஆவணப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அண்மையில் இப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒரு வயோதிபமாது மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்தே பொலிஸார் போக்குவரத்துச் சோதனைகளை அதிகப்படுத்தியுள்ளனர். (ப-24)

சிறுகதை

# சுனாமியும் ஒரு நாஸ்திகனும்

காரியாலயத்தால் வீடு வந்ததும் மேற்சட்டையைக் கழற்றி சேலைக்கொடியில் போட்டுவிட்டு, களைப்புத் தீர சாய்வு நாற்காலியில் "அப்பனே முருகா" என்றபடி சாய்ந்தேன். அவ்வளவு உடல் அசதி எனக்கு. வழக்கம் போல என் மனைவி சுடச்சுட ஒருகப் காப்பியைக் கையில் ஏந்தியபடி என் அருகே கதிரையில் வந்தமர்ந்தபடி காப்பியை என்னிடத்தே நீட்டினாள. காப்பியை நான் அருந்தியபடி இருக்க, அவள் கூறினாள்,

"நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே..."

"ஓம் ஞாயிற்றுக்கிழமை தான். அதில் என்ன சந்தேகம். கிழமையில் ஒருநாள் ஓய்வாக வீட்டில் இருக்கலாம். காரியாலயத்தில் பைல்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு'' என்று அலுத்துக்கொண்டேன்.

''அது சரி, ஆறுதலாக இருங்கள். நான் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உங்கள் அருமை நண்பர் வேலாயுதம் எத்தனை நாள் எங்கள் வீட்டிற்கு வந்து போய்விட்டார். ஒருமுறை தன் வீட்டிற்கு வந்து போகும்படி கெஞ்சிக் கேட்கிறார். நீங்கள் போனால்தானே, எப்போதும் நேரமில்லை நேரமில்லை என்று காலம் கடத்தி வருகிறீர்கள்.

நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. அருவடைய பிள்ளைகளுக்கும் விடுமுறைதானே வீட்டில் நிற்பார்கள். ஒருக் காப் போய்விட்டு வாருங்களேன்" என்றாள் என் மனைவி.

அவள் கூறியது எனது அருமை நண்பன் வேலாயுதத்தைப் பற்றியாகும். வேலாயுதம் என் சொந்த ஊரிலே பிறந்தவன். என்னோடு ஒத்த வயதினன். பாடசாலை நாட்களில் என்னோடு ஒரே வகுப்பில் படித்து வந்தான். வகுப்பில் நாம் இருவரும் அருகருகே உட்கார்ந்து கொள்வோம். வகுப்பில் உள்ள சக மாணவர்கள் எம்மை 'இரட்டையர்'' என்று பட்டம் சூட்டிக் கூப்பிடுவார்கள். படிப்பில் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. இருவருமே கெட்டிக்காரர். பாடசாலை வாழ்க்கை முடிந்ததும் வேலாயுதம் ஆசிரியர் தேர்வில் தெரிவாகி ஆசிரியரானான். நானோ இலிதர் தேர்வில் எடுபட்டு ஓர் எழுதுவினைஞர் ஆனேன்.

நாம் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்தித்துக்கொள்வோம். நட்பு வளர்ந்தது.

நாம் இருவரும் இணைபிரியாத நல்ல நண்பர்களாக இருந்தபோதும், எங்களுக்குள் ஒரு விடயத்தில் மட்டும் பெரிய முரண்பாடு இருந்தது. நான் கடவுள் நம்பிக்கை மிகுந்தவன். ஆனால் வேலாயுதமோ எனக்கு நேர்மாறு.

"போடா, கடவுள் எங்கே இருக்கிறார்! எல்லாம் மனிதனின் கற்பனையடா. சமயங்களும் அவை கூறும் கடவுளர்களும் மூடநம்பிக்கை என்னும் தாய் பெற்றெடுத்த பிள்ளைகளடா. உன்னைப் போல முட்டாள்கள் வாழும்வரை சமயமும் வாழும். மனிதனுக்கு அறிவு வளரவளர சமயங்களும், சமயத்தின் பேரால் சமூகத்தைச் சுரண்டி வாழும் பசுத்தோல் போர்த்த வேடதாரிகளும் ஒழிந்துபோவார்கள். நான் இப்போ சொல்வது உனக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால் காலம் இதை நிரூபிக்கும் பொறுத்திருந்து பார்'' என்பான்.

இதற்கெல்லாம் அக்காலத்தில் எங்களைக் கற்பித்த மார்கிச கம்யூனிஸ சித்தாந்தங்களில் ஊறிப்போன ஆசிரியர்களேயாகும். கற்பிக்கும் நேரத்தில் அவர்கள் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களில் தங்கள் சித்தாந்தங்களைச் செலுத்திவிட்டார்கள். இதனால் கவரப்பட்டும், தென் இந்திய நாஸ்தீக நூல்களின் அடுக்குமொழி அலங்காரத்தால் கவரப்பட்டும் சீரழிந்த மாணவர்களுள் வேலாயுதமும் ஒருவன்.

எங்களுக்குத் திருமண வயது வந்ததும் நான் என் உறவுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டேன். வேலாயுதம் தான் ஆசிரியர் தொழில் புரிந்துவந்த பருத்தித்துறையில் தன்னுடன் கல்வி கற்பித்த ஆசிரியை ஒருத்தியைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டான். காதலித்துக் கல்யாணம் செய்தாலும் காசாகவும் வீடு வளவாகவும் எக்கச்சக்கமாகச் சீதனம் வாங்கினான் என்று கேள்வி.

அவன் தனது மனைவியுடன் பருத்திததுறையில் வாழ்ந்து வர, நான் சொந்த ஊரிலே வாழ்ந்து வந்தேன்.

* * *

"என்ன கடுமையாக யோசிக்கிறீர்கள், பருத்தித்துறை என்ன ஆயிரம் கட்டையே. உதிலைதானே. நாளைக்கு வேளைக்கு எழுப்பிவிடுறன். உங்கள் நண்பர் வீட்டுக்குப் போய்வாருங்கள். விட்டுவிட்டுக் கொண்டு போக ஒருக்காலும் போகமாட்டீர்கள்... இது பெரிய குறையாகிப் போகும்" என்றாள் மனைவி.

மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கே என்னை நித்திரை விட்டெழுப்பி வழக்கத்துக்கு மாறாக உபசாரம்செய்து நண்பன் வேலாயுதம் வீட்டுக்கு அனுப்பிவைத்தாள்.

"நண்பன் வீட்டிற்குப் போகும்போது வெறுங்கையோடு போகாதேயிங்கோ, இந்தாருங்கோ இதையும் கொண்டு போங்கோ....'' என்று இரு பிஸ்கட் பெட்டிகளை எடுத்து ஒரு பையுள் போட்டுத் தந்துவிட்டாள்.

நான் பருத்தித்துறை சென்றடைந்தபோது சுமார் எட்டு மணியிருக்கும். என்னைக் கண்டதும் என் நண்பன் என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்றான்.

"வாடா வா, பல நாட்களுக்குப் பின் என் ஞாபகம் உனக்கு வந்ததே அதிசயம்தான். எப்ப பார்த்தாலும் கோயில் குளம் என்று திரியிற உனக்கு எங்கே நண்பனை நினைக்க நேரமிருக்கப் போகுது. இப்போது என்ன இன்று ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரக் கோவிலுக்குப் போகும் வழியில் இங்கேயும் போட்டுப் போவம் என்று வந்தாயோ'' என்று ஏளனமாக வினவினான்.

"என்ன செய்வது வேலைக்குப் போகவேண்டும். சனி, ஞாயிறு லீவு என்றால் எங்கள் ஊர் கந்தசாமி கோவிலில் இராசகோபுரம் கட்டுகிறார்கள், அதற்கு ஐம்பது இலட்சமாவது செலவாகும். கோயில் பரிபாலனச்பையினருடன் சேர்ந்து ஊரில காசு சேர்க்கப் போக வேண்டும். உன்னிடம்வர ஆசை இருந்தாலும் எங்கே ஓய்வு கிடைக்கிறது...''

"என்ன இராசகோபுரம் கட்டுகிறீர்களா. அதுவும் ஐம்பது இலட்சம்செலவில். ஏன்ரா இப்பவும் முட்டாள்களாக இருக்கிறீர்களே. கந்தசாமியார் கேட்டவரே இராசகோபுரம் கட்டித்தரச் சொல்லி. எத்தனை மக்கள் இருக்க வீடு வாசல் இல்லாமல கொட்டிலிலும் குடிலிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறு சிறு வீடுகளாவது கட்டிக்கொடுங்கோவன். அல்லது உந்த ஐம்பது இலட்சத்தில் ஊரிலே ஒரு தொழிற்சாலை அமைத்து அதில் ஐம்பது பேருக்கு வேலையாவது கொடுத்தால் அந்த ஐம்பது குடும்பங்களும் வாழும்.

ஏன் உனக்குத் தெரியாதே முன்பு இங்கிருந்த கண்ணாடித் தொழிற்சாலையில் எத்தனை பொடியன் பொட்டையள் வேலை செய்ததுகள். ஏன்ரா உங்கள் மூளை இப்படிப் போகிறது. உங்களைத் திருத்தவே முடியாது. நீயும் மற்றையவர்கள் போல சமயம் என்ற குட்டையில் ஊறிய மட்டைதானே'' என்று பொரிந்துதள்ளினான்.

அவன் அப்படித்தான் பேசுவான். அவனது உள்ளத்தில் அவ்வளவுக்கு கம்யூனிஸ கொள்கைகளும் பகுத்தறிவு பிரசாரக்கொள்கைகளும் ஊறிப் போய்க கிடந்தன. அவனுடன் எதிர்த்து வாதாடி என் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை.

''அது கிடக்குது விடு. என் கடவுள் நம்பிக்கையை உன்னால் மாற்றமுடியாது. அதே போல உன் கொள்கைகளையும் என்னால் மாற்றமுடியாது'' என்றேன். அப்போது இரு கோப்பைகளில் தேநீருடன் வந்த அவன் மனைவி,

"அவருடன் ஏன் வீணாக வாதாடுகிறீர்கள். அவருக்கு ஒன்றிலுமே நம்பிக்கையில்லை. பெற்ற தாய் தகப்பனுக்கே திவசம் திதி செய்யாத மனுசன். அதெல்லாம் மூடநம்பிக்கை என்பார் '' என்றாள்.

இப்படியாக நாம் கதைத்துக் கொண்டிருந்தபோது பெரிய ஆரவாரம் வீதியில் கேட்டது. சிறுவர், இளைஞர், பெண்கள் எல்லோருமே வீதியில் விழுந்தடித்து தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தனர். ஏன் இவர்கள் எல்லோரும் இப்படி ஓடுகிறார்கள் என்று யோசித்துக் கொண்டிருக்க, வேலாயுதத்தின் மனைவி விரைந்து கேற்றடிக்குச் சென்று, மீண்டும் நாம் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்தாள்.

"என்னப்பா, கடலலை பனையளவுக்கு எழும்பி வேகமாக வருகிறதாம். கரையோர மக்கள் எல்லாரும் ஓடுகிறார்கள். பிள்ளைகள் இரண்டும் பள்ளிக்கூடம் போட்டுதுகள். அதுகளுக்கு என்ன ஆச்சோ தெரியாது. ஓடிப் போய்ப் பார்த்து வாருங்கோவன்'' எனத் துடித்தாள்.

"ஐயோ! என்ரை பிள்ளையள் என்ன ஆனார்களோ தெரியேல்லையே. கடவுளே! கடவுளே!!'' என்றபடியே வேலாயுதம் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு பாடசாலை நோக்கி ஓடினான். பின்னால் அவன் மனைவியும் ஓடிச்சென்றாள்.



சற்றுநேரததில் வேலாயுதமும் அவன் மனைவியும் இரு பிள்ளைகளும் வ்டு வந்து சேர்ந்தனர்.

"என்ன பயங்கரம்! நினைத்துப் பார்க்கவும் பயமாக இருக்கிறது. அவ்வளவு உயரத்துக்கு அலை வந்து கரையோரத்தில் வாழ்ந்த மக்களை அள்ளிக்கொண்டு போய் விட்டதாம்''

நீர்வை
இ. தியாகராசா

"அடக் கடவுளே! எப்படி உன் பிள்ளைகள் தப்பியது?''

"அது மாமா, எங்கட சேர் கடல் அலை 'பேரிரைச்சலோட தூரத்தில வாறதைக் கண்டதும், பக்கத்தே இருந்த பிள்ளையார் கோவிலுக்கு ஓடும் ''ம சொன்னார். நாங்களும் ஓடிப்போய் கோவிலுக்குள் நின்றோம். கோவிலில் நின்ற ஐயா எங்களைக் கோவிலின் இராசகோபுரத்தில் ஏணி மூலம் ஏற்றிவிட்டார். நாங்கள் மேலே நின்றதால் தப்பினோம். இல்லாட்டி எங்களையும் அலை அள்ளிக்கொண்டுதான் போயிருக்கும்'' என்று வேலாயுதத்தின் பிள்ளைகள் கூறினார்கள்.

''சரி ஏதோ நல்லகாலம். அந்தக் கோபுரம் இருந்ததால் உன் பிள்ளைகள் தப்பினார்கள். சரி நேரமாகுது நானும் போகப்போறன்'' என்றேன்.

''அங்கையிருந்து வந்தனி, நின்று சாப்பிட்டுவிட்டுப் போ. போகும்போது என் மனைவி ஐயாயிரம் தருவாள். அதைக் கொண்டுபோய் கந்தசாமி கோவில் இராசகோபுர நிதிக்குக் கொடு" என்றான் வேலாயுதம்.

என்னால் என் காதுகளையே நம்பமுடியவில்லை. கஷ்டம் வரும்போது மனிதன் கடவுளை நினைக்கிறான். இதற்கு வேலாயுதம் விதிவிலக்கல்லவே.

(யாவும் கற்பனை)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 39



அடுத்த வாரம் பலரும் பாராட்டுகின்ற ஒரு பிரபலசந்நியாசி அங்கு சென்றார். பலியை நிறுத்திய செய்தியை அவர் கேட்டார். அவர் பின்வருமாறு கூறினாராம். "ஆகா வாரியார் இப்படிச் செய்தது சரி ஆகாது, ஆண்டுக்கு ஒரு முறைதானே பக்தர்கள் தெய்வபக்தியுடன் பலியிடுகிறார்கள். அவர்களைப் பலியிடக்கூடாது என்று தடுத்து நிறுத்தியது நியாயமாகாது. பக்தியைக் கொடுக்கலாமா? உண்மையிலேயே வாரியாருக்கு ஜீவகாருண்யம் இருக்குமானால் தினம் ஆயிரமாயிரம் ஆடுகளை வெட்டுகின்ற கசாப்புக்கடையில் சென்று மறியல் செய்யலாமே! அப்படிச் செய்யாமல் எப்போதோ ஒரு முறை பக்தியுடன் பலியிடுவதை நிறுத்தி அவர்களின் பக்தியைப் பாழாக்கலாமா?"

இந்த வசனத்தைக் கேட்டு அந்த ஜனங்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது. இவர் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது. வாரியார் கூறுவது நியாயமா? இவர் கூறுவது நியாயமா? என்று மதிமயங்கி நின்றார்கள் அடுத்தவாராம் அதே இடத்திற்கு நான விரிவுரை செய்யப்போனேன். அங்குள்ள அன்பர்கள் அந்தத் துறவியார் கூறியதை என்பால் கூறினார்கள்.

அப்போது அடியேன் கூறினேன். அன்பர்களே! பெரும் துறவியாகிய அவர் ஆண்டுக்கு ஒருமுறை பலியிடுவதை நிறுத்துவது பக்தியைக் கெடுப்பதாகும். தினம் பல பல உயிர்களைக் கொல்லும் கசாப்புக்கடையில் சென்று உயிர்க் கொலையை நிறுத்தக்கூடாதா? என்று கூறுகின்றார்.

கோயிலில் வழிபடவந்த ஒருவன் கொடிமரத்தின் அருகில் மலங்கழித்துவிட்டான். அங்கே நான் "ஐயா! கோயிலில் மலங்கழிக்கலாமா? என்றேன்.

அங்கே இருந்த ஒரு பெரியவர் என்னைப் பார்த்து "ஐயா! அவர் ஏதோ வயிற்றுவலி காரணமாக மலங்கழித்துவிட்டார். இதை நீர் தடுக்கலாமா? ஆயிரம் ஆயிரம் பேர் மலங் கழிகின்ற கக்கூஸில் சென்று தடுப்பதுதானே முறை,?" என்றார்.

"கோயில் வணங்கும் இடம். கக்கூஸ் மலங்கழிக்கும் இடம். மலங்கழிக்க வேண்டிய இடத்தில் அந்த வேலையைச் செய்யவேண்டும். இறைவனை வணங்கும் இடத்தில் அசுத்தம் செய்யக்கூடாது" என்றேன்.

ஆகவே "அன்புவெள்ளம் ஓடும் திருக்கோயிலில் உதிர வெள்ளம் ஓடக்கூடாது" என்றேன் மக்கள் என் உரையைக் கேட்டுத் திருப்தியுற்றார்கள்.

## திருவருட் செயல்கள்

இறைவனுடைய திருவருள், அவனை நினைந்துருக்கும் அடியார்களுக்கு தோன்றாத் துணையாக நின்று, அவ்வப்பொழுது துணை செய்கின்றது. இதற்கு அடியில் வரும் நிகழ்ச்சிகள் சான்று பகர்கின்றன.

சென்னையில் பாம்பன் சுவாமிகள் பாடி அருளிய சண்முகக் கோட்டம் என்ற பெயருடைய குயப்பேட்டை கந்தசுவாமி கோயிலில் இராஜகோபுரத் திருப்பணி செய்து குப்பாபிஷேகம் செய்தேன. அந்தக் கும்பாபிஷேகத்திற்கு அன்பர் திரு நாவப் இராஜ்மணிக்கம் வந்திருந்தார். மதுரையில் சன்மார்க்க வங்கி நிதிக்கு டிக்கட்டு மூலம் வசூலிப்பதற்காக காலை 10மணிக்கு என்னுடைய விரிவுரைக்கு ஏற்பாடு செய்திருந்தது. இராஜ மாணிக்கம் பிள்ளை என்னைப் பார்த்து "சுவாமி! நான் காரில் திருச்சிராப்பள்ளிக்கு போகிறேன். என்னுடன் மனேஜர் தங்கவேல் மட்டும் வருகிறார் தாங்கள் என்னுடன் வாருங்கள். திருச்சியில் கொண்டு போய் ரயில் ஏற்றிவிடுகிறேன். தாங்கள் என்னுடன் வந்தால் என்னுடைய நாடகத்திற்குப் பயன்படுகிற மாதிரி பல பல சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வேன்" என்று கூறினார்.

நான் அதற்கு இசைந்து நானும், திருப்பணி செய்த ஸ்தபதி நா.சௌந்தரபாண்டியன் பிள்ளையும் இரவு 9 மணிக்கு அவருடன் காரில் புறப்பட்டோம். விடியற்காலை 3மணிக்கு திருச்சி ஜங்க்ஷனில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் நான் ரயில் ஏறி மதுரைக்குப் போவதாகத் திட்டம்.

காரில் போகும்பொழுது இராஜமாணிக்கம் பிள்ளை அவருடைய நாடகத்திற்கு உபயோகமான பல சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். இரவு 12மணிக்கு மேல் அவரும் நானும், சிறிது கண்ணயர்ந்துவிட்டோம். அப்போது 1மணி இருக்கும்.

பெரம்பலூருக்கருகில் ஒரு காட்டில் கார் நின்றது. இராஜமாணிக்கம்பிள்ளை கண் விழித்துக்கொண்டு, டிரைவரைப் பார்த்து "ரத்தினம்! ஏன் கார் நிற்கின்றது?" என்று கேட்டார்.

"காரின் வில் ஒடிந்து பெட்ரோல் டாங்கியைக் குத்திபெட்ரோல் முழுவதும் சிந்திவிட்டது" என்று டிரைவர் கூறினார் நான் இதைக்கேட்டுத் திகைத்தேன். "இராஜமாணிக்கம் பிள்ளை! இனி கார் ஓடாதா?" என்று கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டே "சுவாமி! பொழுது விடிநததும் வேறு ஒரு காரைக்கொணர்ந்து அதில் நமது காரைக் கட்டிஇழுத்துக கொண்டுதான் போகவேண்டும். தாங்கள் நாளை காலை விரிவுரைக்குப்போக முடியாத இடர்பாடு தங்களுக்கு என்னால் நேர்ந்துவிட்டதே!' என்று கூறி வருந்தினார். நான் காரை விட்டிறங்கி, துண்டை நிலத்தில் விரித்து, அதன் மேல் அமர்ந்து நிகழ்ச்சிக்குப் போகமுடியாத நிலை நேர்ந்துவிட்டதே! கட்டணம் அமைத்த கதையாயிற்றே! ஜனங்கள் ஏமாந்து போவார்களே! என்ன செய்வேன்! என்று ஏங்கி முருகனுடைய சடக்கர மந்திரத்தை உள்ளம் உருகி ஜெபித்துக்கொண்டிருந்தேன்.


பத்துநிமிடத்திற்குப் பிறகு ஒரு கார் காலியாக அந்த வழியில் வந்து கொண்டிருந்தது. இராஜமாணிக்கம்பிள்ளை கையை நீட்டிக் காரை நிறுத்தினார். "கார் எங்கே போகிறது?" என்று கேட்டார்.

டிரைவர், "கார் மதுரைக்குப் போகிறது. மதுரை ஸர்.பி.டி.ராஜன் அவர்களின் தம்பியின் கார்" என்று கூறினான். டிரைவருக்குப் பக்கத்தில் ஒரு சிறு பிள்ளைமட்டும் தூங்கிக் கொண்டிருந்தான்.

இராஜமாணிக்கம்பிள்ளை "வாரியார் சுவாமிகள் மதுரைக்குப் போகிறார். அவரைக் கொண்டுபோய் மதுரையில் விட்டுவிடு" என்று கூறினார்.

டிரைவர் "ஓ! வாரியார் ஐயாவா? எஜமானுக்கு வேண்டியவர்கள் ஆயிற்றே! காரில் ஏறிக் கொள்ளட்டும். மதுரையில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவேன்" என்றான்.


அப்போது என் மனம் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பூசைப் பெட்டியை எடுத்துக்கொண்டு சௌந்தர பாண்டியன் பிள்ளையும், நானும் பின்சீட்டில் சுகமாக அமர்ந்து கொண்டோம். அப்பொழுது நான் சௌந்தரபாண்டியம் பிள்ளையைப் பார்த்து "நீங்கள் இனி திருப்பணியே செய்யக்கூடாது. திருப்பணி என்று சிரமப்படக்கூடாது என்று எனக்கு அறிவுரை கூறினீரே! இப்போது நடுக்காட்டில் நடு இரவில் முருகன் மயில் வாகனம் அனுப்பி மதுரை போகுமாறு கருணை புரிகின்றாரே? இந்த கந்தவேள் கருணைக்கு நான் எத்தனைத் திருப்பணி செய்ய வேண்டும்?" என்று கூறி முருகனுடைய கருணையை அவர் உணருமாறு செய்தேன். (தொடரும்)



விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் கௌசல்யன் உட்பட 6 பேரின் படுகொலையைக் கண்டித்து நேற்று முன்தினம் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டபோது கல்முனைநகரில் கடைகள் பூட்டப்பட்டு வீதி வெறிச்சோடிக் கிடப்பதைப் படத்தில் காணலாம்.



காங்கேசன்துறை அஞ்சல் அதிபரை இடமாற்றக் கோரி தபால் தொடர்பு சேவையாளர்கள் யாழ்.பிரதம தபாலகம் முன்னால் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம். படம்:- உதயதீபன்



மக்கள் பாவனை அதிகமாக உள்ள வேம்படிச் சந்தியின் வீதியின் நடுவே குழியொன்று ஏற்பட்டுள்ளது. இக்குழியினால் விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கு முன்னர் இவ் வீதிப் பராமரிப்புக்குரியவர்கள் இக் குழியை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

(படங்கள்:- ஞா.ஐங்கரன்)

## நிதியுதவி

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்கும் வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்கு கல்விக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கென சுவிஸில் வசித்துவரும் புங்குடுதீவைச் சேர்நத தர்மகுலசிங்கமும் அவரது நண்பர்களும் 70ஆயிரம் ரூபாவை வழங்கியிருக்கின்றனர்.

கடந்த வருடமும் தர்மகுலசிங்கம் மேற்படி கல்லூரிக்கு ஒரு லட்சத்து 30ஆயிரம் ரூபாவை வழங்கி இருந்தமை குறிப்பிடத் தக்கது. (ப-49)

## கடவுளே நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை

இன்றைய நற்செய்தியில் இயேசு "மணமகன் இருக்கு மட்டும் நோன்பு இருக்க மாட்டார்கள், மாறாக மணமகன் சென்ற பிறகு அவர்கள் நோன்பு இருப்பர்" என்கிறார். இயேசு சொன் னதைப் போலவே அவர் தான் தந்தையோடு வலப்பக்கம் வீற்றிருக்க, அதாவது வானகம் சென்ற பிறகு, சீடர்கள் செயல்பட ஆரம்பிக்கின்றார்கள். இங்கே நோன்புக்கே புதிய அர்த்தத்தைக் கொடுக்கின்றார்.

### தவக்காலச் சிந்தனை

இங்கு நோன்பு பற்றிய மரபுப்பார்வையையும் மாற்றி புதிய பார்வை யையும் தருகின்றார். கடவுள் விரும்பும் நோன்பு தன் உடலை வருத்திக் கொள்ளுதல் மட்டுமல்ல மாறாக பிறர் வாழத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இருக்கின்றதா என்பதைக் கண்டு அதற்கு ஏற்பச் செய்வதும், அதன் மூலமாகப் பிறர் வாழ்வில் ஒளியேற்றவும் கூடிய செயற்பாடுகளே ஆகும்.

காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா. உலகம், உடல் ஆகியவை பிசாசுகள் என்ற நிலை மாறி இவ்வுலகம் உயிர்கள் வாழக் கடவுள் தந்த வீடு, உயிர்கள் எல்லாம் கடவு ளின் உடல் உறுப்புகள், இவைகளை மென்மேலும் கட்டி எழுப்பி தங்கள் உடல்களைக் கொடுப்பதுதான் உண்மையான நோன்பு.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# கௌசல்யன் குழுமீது தாக்குதல் நடத்துவதற்காக ஆயுதக் குழுக்கள் நீண்டகாலமாகத் திட்டமிட்டிருந்தன

## அரச புலனாய்வுப் படைகளின் அட்டகாசங்கள் வெளிச்சத்துக்கு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை சம்பவத்தை அடுத்து பொலநறுவை எல்லைக் கிராமங்களை மையமாகக் கொண்டு சிறீலங்கா அரச புலனாய்வுப்பிரிவின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுப்படைகளின் அட்டகாசங்கள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.**

இதுகுறித்து தமிழ் இணையம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

விடுதலைப்புலிகளால் நீக்கப்பட்ட கருணாவின் சகோதரர் ரெஜி விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலில் கொல்லபபட்டதைத் தொடர்ந்து புலிகள் மீதான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் இந்த ஆயுதக் குழுக்கள் திட்டமிட்டிருந்தன என்றும், இதற்கு தருணம் பார்த்துக் காத்திருந்து கௌசல்யன் மீதான தாக்குதல் மூலம் தமது வஞ்சத்தைத் தீர்த்திருக்கின்றனர் என்றும் கொழும்பிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களாகவே பொலநறுவை எல்லைக்கிராமங்களை அண்டிய முஸ்லிம் பிரதேசங்களில் ஆயுதக்குழுக்களின நடமாட்டம் மிகையாகக் காணப்பட்டது. இவர்களது நடமாட்டம் குறித்து வெளியில் தகவல்கள் கசிந்து விடாமலிருக்க அப்பிரதேங்களில் அரசபடையினரின் உதவியுடன் திடீர் ஊரடங்குச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதனால் அங்கிருந்து வழக்கமாக வெளியிடங்களுக்கு சென்று வருவோர் கடத்திச செல்லப்பட்டு மிரட்டப்பட்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் ஆயுதக்குழுக்களால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வருவதாக கடந்த வாரம் இப்பகுதி முஸ்லிம் மக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தனர்.

இதேவேளை கடத்தல், ஊரடங்கு போன்ற வேலைகளை புலிகள்தான் மேற்கொள்கிறார்கள் என்ற வதந்தியையும் பரப்பிய இந்த ஆயுதக்குழுக்கள் தமிழ-முஸ்லிம் உறவுக்கு மத்தியில் ஆப்புவைககும் காரியங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளன என்று தெரியவந்துள்ளது.

மாங்கேணிக்கு மேற்காக உள்ள பொலநறுவை எல்லைக் கிராமமான ஓடியாமடு என்ற இடத்தில் இராணுவத்தின் பாதுகாப்புடன் இந்த ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதாக ஆழிப பேரலை அனர்த்தத்தை அடுத்து ஒரு தகவல் வெளிவந்திருந்தது. ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்ற அன்று மாங்கேணியிலிருந்து தப்பிய ஒரு பயணிகள் பேருந்து வெலிக்கந்தைக்குச் சென்று அங்கிருந்து வாழைச் சேனைக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையில் திக்குத்திசை தெரியாமல் ஒடியாமடுப் பகுதிக்குள் சென்றுவிட்டது.

இந்தப்பயணிகள் பேருந்தை நிறுத்தி அதிலிருந்த அனைவரும் கீழே இறக்கப்பட்டு அவர்களில் எவராவது புலி ஆதரவாளர் உள்ளனரா என்பதை அறிய துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். அப்படி விசாரித்ததில ஒருவர் அந்தக்குழுவினரால் பிடித்துச்செல்லப்பட்டனர். மிகுதிப்பயணிகள் விடுவிக்கப்பட்டனர். பிடித்துச்செல்லப்பட்ட அந்த நபர் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தற்போது பொலநறுவை வெலிக்கநதை ஏ-11 வீதியில் 103 மற்றும் 104ம் மைல் கற்களுக்கு இடையில் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் அரசுடன் சேர்ந்தியங்கும் இந்த ஆயுதக்குழுக்கள் மேற்கொண்டுள்ள இந்தப்படு பாதகச் செயலுக்கும் நிறைய தொடர்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கருணா குழு என்ற பெயருடன் உள்ள ஒரிருவர் மட்டக்களப்பு பறபொடி முகாமில் இராணுவ புலனாய்வுப்பிரிவின் பாதுகாப்புடன் உள்ளனர் என்று மட்டக்களப்பு மக்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு பத்திரிகையாளரும நாட்டுப்பற்றாளருமான நடேசன் படுகொலை மற்றும் கருணா விடுதலைப் புலிகளால் நீக்கப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ். மக்களை துரத்தியமை ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்த பிள்ளையான் மற்றும் இனியபாரதி ஆகியோர் இந்த முகாமிலேயே உள்ளனர் என்றும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தின் பறபொடி முகாம் காலாகாலமாக தமிழ்ப் போராட்டத்திற்கு எதிரான கோடரிக்காம்புகளுக்குக் கம்பளம விரித்த முக்கிய முகாம் என்பதும் புளொட் மோகனும் ஒரு காலத்தில் இங்கிருந்து செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

புலிகள் அமைப்பிலிருந்து கருணா நீக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதி, அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல் துறைப்பொறுப்பாளரும் பொருண்மியப் பொறுப்பாளருமான பாவா ஆகியோரை அடுத்து அரசியல் துறையினரை நோக்கிய அடுத்த இலக்காக கௌசல்யன குறிவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப-4)

### கழிவு கொட்டப் படுகின்றன

கொக்குவில் நந்தாவில் வீதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்றது.


ஆடியபாதம் வீதியையும் நந்தாவில் வீதியையும் இணைக்கும் சந்தி முதல் சில குறிப்பிட்டளவு தூரத்திற்கு அதிகளவு கழிவுப் பொருட்கள் தினமும் கொட்டப்படுகின்றன.

இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் தெருநாய்கள இவற்றை இழுத்து வீதிக்கு குறுக்கே விட்டுச் செல்வதால வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் இப்பகுதி பொதுமக்கள் மிகவும் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-122)

## 5-வது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி

இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ஐந்தாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டி நேற்று முன்தினம் ஈஸ்ட் லண்டனில தொடங்கியது. அதில் இங்கிலாந்து அணியினர் போராடி வெற்றிவாய்ப்பினை இழந்தனர்.

7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் 5வது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் ஈஸ்ட் லண்டனில் நடைபெற்றது. மழை காரணமாகத் தாமதமாகத் தொடங்கிய இந்தப் போட்டியில் முதலில் டாஸ் வென்ற தென்னாபிரிக்க அணியினர், நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 311ஓட்டங்களை எடுத்தது.




தென்னாபிரிக்க அணியின் கப்டன் கரீம் ஸ்மித் 115ஓட்டங்களைக் குவித்து அணிக்கு சிறப்பானதொரு துவக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தார். இவரையடுதது கெம்ப் 80ஓட்டங்களும், காலிஸ் 49 ஓட்டங்களும் அதிகபட்சமாக எடுத்தனர். இங்கிலாந்து அணியின் சார்பில் டேரன் கா.ஃப் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.



இதனையடுத்து 312 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இழப்பிற்கு 304 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. ஒரு கட்டத்தில் 18பந்துகளும் 36 ஓட்டங்களும் எடுக்க வேண்டும் என்ற நிலையில், வெற்றி யாருக்கு என்ற பரபரப்பான நிலை ஏற்பட்டது.

எனினும் தென்னாபிரிக்க அணியினரின் நேர்த்தியான பநது வீச்சினாலும், துல்லியமான களத்தடுப்பினாலும் இங்கிலாந்து வெற்றிவாய்ப்பினை இழந்தது.

இங்கிலாந்து அணியின் சார்பில் பீற்றர்சன் கடைசிவரை ஆட்டம் இழக்காமல் 100ஓட்டங்களை எடுத்தார். மைக்கேல் வாகன் 80ஓட்டங்களை எடுததார். தென்னாபிரிக்க அணியில் காலிஸ அதிகபட்சமாக 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். 7 போட்டிகள் கொண்ட இந்தத்



தொடரில் தென்னாபிரிக்க அணி 3-1என்ற நிலையில் முன்னணியில் உள்ளது. (ற)

### ஹரிகிருஸ்ணா வெற்றி

சர்வதேச செஸ் தொடரில் ஹரி கிருஷ்ணா இரண்டாவது இடத்தில் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் பெர்முடாவில், முன்னணி வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஒன்பதாவது சுற்றுப்போட்டியில் உலக ஜூனியர் சம்பியனான ஹரிகிருஷ்ணா, கியுபாவின் லீனியர் டொமினிக்கை சந்தித்தார்.

இதில் சிறப்பாக விளையாடிய ஹரிகிருஷ்ணா 46வது காய் நகர்த்தலில் வெற்றிபெற்றார். இதன் மூலம் இவர் 5புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்குத் முன்னேறினார். டோமினிக்ஸ் 4.5புளளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். இஸ்ரேலின் போரிஸ் கெல்பான்ட (55) முதல் இடத்தில் உள்ளார். (ற)

### குத்துச்சண்டை வீரர் மரணம்

உலகக் கோப்பை குத்துச் சண்டைத் தொடரில் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீரரான ஜோராம்தன்கா (41)நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

மிசோரம் மாநிலத்தை சேர்ந்த இவர் உயர் இரத்த அழுத்தம் காரணமாக நேற்று முனதினம் காலை மரணமடைந்தார். 1985 இல் ஜோதராம்தன்கா, மிசோரம்-மியான்மர் பார்டர் சம்பியன் ஷிப் போட்டியில் இவர் தங்கம் வென்றார். 1990 மும்பையில் நடந்த உலகக்கோப்பைத் தொடரில் வெண்கலப் பதக்கம் வென்றது. இது தவிர ஜோரமதன்கா பல தேசிய மற்றும் சர்வதேச தொடர்களிலும் பங்கேற்றுள்ளார். (ற)

## அக்தரின் நிலை பரிதாபம்

உடற்பயிற்சி நிபுணாகள் அனைவரும் விடுமுறையில் செல்ல அக்தரின் நிலை பரிதாபமாக உள்ளது.

சமீபததில் பாகிஸ்தான் கிரிகெற் சபை, உடற்பயிற்சி நிபுணர்களான முர்ரே ஸ்டீவன்சன், டேரின் லிப்சன், கிரக் காம்படன் ஆகியோர் அடங்கிய மருத்துவ கமிஷனை அமைத்தது. இவாகளது முக்கிய பணி வீரர்களை காயத்தில் இருந்து விரைவாக மீட்பதே.

ஆனால் இந்த மூன்று வெளிநாட்டு பயிற்சியாளர்களும் நேற்று முன்தினம் தங்கள் சொந்த நாட்டுக்குச் சென்று விட்டனர். பயிற்சியாளர் பாப் உல்மரும் இலண்டன் சென்றுவிட்டார்.

இதனால், அக்தரின்பாடு திண்டாட்டமாகி விட்டது. அவுஸ்



திரேலிய தொடரின் போது காயமடைந்த இவர் கிரக் காம்ப்ட்டனிடம் பயிற்சி மேற்கொண்டு வந்தார்.

தற்போது காம்ப்டன் இல்லாததால் இந்தியத் தொடருக்கு முன்பாக அக்தர் தேறுவது கடினம். தவிர பல்வேறு சர்ச்சைகளில சிக்கித் தவிக்கும் இவர் அணியில் இடம்பெறுவதும் சந்தேகமாக உள்ளது. (ற)

விளையாட்டு செய்திகள்




அமெரிக்க டெனிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா, ஹைதராபாத் ஓபன் டெனிஸ் போட்டியில் பங்கேற்க ஹைதராபாத் வந்துள்ளார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க சென்ற நவரத்திலோவா இந்திய பாரம்பரிய உடையான புடவையில் வந்து ரசிகர்களின் இதயங்களைக கவர்ந்தார். ஆந்திரப்பிரதேச சுற்றுலாத்துறை அமைச்சர் கீதா ரெட்டியுடன் நவரத்திலோவா.

# நேபாளத்தில் அராஜகம் கட்சித் தலைவர்கள் கைது



(காத்மண்டு)

நேபாளத்தில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். பலர் வீட்டுக்காவலில் வைக் கப்பட்டனர். கைதுக்குப் பயந்து பல அரசியல் தலைவர்கள் தலைமறைவாகிவிட் டனர்.

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் துபா தலைமையிலான அரசை பதவி இறக்கி, ஆட்சிப்பொறுப்பை மன்னர் ஞானேந்திரா ஏற்றதைத் தொடர்ந்து நாட்டில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகைகள், தொலைத்தொடர்பு ஆகியவற்றுக்குக் கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டுள்ளன.


இந்நிலையில் நேபாளத்தில் செயற்படும் பல்வேறு அரசியல் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் 43 பேர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டனர். 25பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். மற்றவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். தலைவர்களின் சொந்தப் பாதுகாப்புக்காகவும், சட்டம், ஒழுங்கு நடவடிக்கைக்காகவும் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று உள் துறை அமைச்சகம் தெரிவித்தது.

நேபாளி காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, நேபாளி காங்கிரஸ் (ஜன நாயகம்), ஜனமோர்ச்சா நேபாள் உட்பட பல்வேறு கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதுக்குப் பயந்து பல தலைவர்கள் தலைமறைவாகிவிட்டனர். அவர்கள் தீவிரமாகத் தேடப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# அவுஸ்திரேலியா அருகில் நிலநடுக்கம்

அவுஸ்திரேலியா அருகில் தெற்கு பசுபிக் கடலில் உள்ள வனாடு என்ற தீவில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் ரிக்டர் அளவு மானியல் 6.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

இதுதொடர்பாக ஹவாயில் உள்ள சுனாமி எச்சரிக்கை மையம் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் சுனாமி ஏற்படவில்லை. வேறு எந்தச் சேதமும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை என அவுஸ்திரேலிய பூகம்பவியல்துறை தெரிவித் துள்ளது. (து)



ஆப்கானிஸ்தானின் பயணிகள் விமானம் ஒன்று கடந்தவாரம் பனிமலையில் சிக்கி விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 104 பயணிகளும் உயிரிழந்தனர். விபத்துக்குள்ளான விமானத்தின் பின்பகுதி பனிமலையில் சிக்கியுள்ள காட்சி.

# தீவிரவாதிகள்–இராணுவம் மோதல் பிலிப்பைன்ஸில் 60 பேர் பலி

பிலிப்பைன்ஸில் உள்ள ஜோலோ தீவில் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே நடந்த சண்டையில் 60 பேர் கொல்லபபடடனர்.

பலிபபைன்ஸ் நாட்டில் றோமன் கத்தோலிக்கர்கள அதிகம் வசிககின்றனர். இங்குள்ள ஜோலோ தீவில் முஸ்லிம்கள் அதிகம் உள்ளனர். இப்பகுதியைத் தனி நாடாக அறிவிக்கக்கோரி அபுசாயப் என்ற தீவ்ரவாத அமைப்பு போராடி வருகிறது. பலமுறை அமைதிப் பேச்சு நடந்தும் இந்தத் தீவிரவாதிகள் வழிக்கு வராததால், அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் இத் தீவில் உள்ள பட்டிகுல் நகரில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் இராணுவவீரர்கள் சிலர் படுகாயமடைந்தனர். மேலும் மூன்று இடங்களில் இதேபோன்ற தாக்குதலில் தீவிரவாதிகள் ஈடுபட்டதால் இராணுவத்தினர் கடும நடவடிக்கையை மேற்கொண டனர்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் 3ஆயிரம் இராணுவவீரர்கள் குவிக்கப்பட்டனர். அபுசாயப் தீவிரவாதிகள் ஒளிந்திருந்த பகுதிகளில் ஹெலிகொப்டர் மூலம் கடந்த மூன்று நாட்களாகத் தாக்குதல் நடந்தது. இதுவரை 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகப் பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். 20 இராணுவ வீரர்களும் இந்தச் சண்டையில் பலியாகியுள்ளனர். (து)

# 33 அபூர்வ வகை சிலந்திகள் கொச்சியில் கண்டுபிடிப்பு

கேரளமாநிலம் கொச்சியில் மங்கலவனம் பகுதியில் 33 அரியவகை சிலந்திகள் கண்டறியப்பட்டுள்ளன.

தேவராவில் சேக்ரட் ஹார்ட் கல்லூரி ஆராய்சசி மாணவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இது தெரியவந்துள்ளது.

சதுப்புநிலக் காடுகளில் மட்டுமே காணப்படும் பிசௌரா இனத்தைச் சேர்ந்த 250 சிலந்திகள் மங்கலவனத்தில் காணப்பட்டதாகவும் மங்கலவனத்தில் காணப்படும் சிலந்திகள் 13 குடும்பஙகளைச் சேர்நதவை எனவும் இவற்றில் சிலவற்றால் வலை பின்ன இயலும். சில சிலந்திகளால வலை பின்னமுடியாது எனவும் விலங்கியல் பேராசிரியர் பி.ஏ. செபஸ்டியன் தெரிவித்தார்.

மேலும் ஒபடமாடா மற்றும் மலைகோசா இனச் சிலந்திகளும் காணப்படுவதாக அவர் கூறினார். (து)

WORLD NEWS உலக தரிசனம்

# விண் இலக்குகளை அழிக்கவல்ல அஸ்ட்ரா ஏவுகணை


போர் விமானங்களில் பொருத்திச் சென்று விண் இலக்குகளையும், எதிரியின போர் விமானங்களையும் வீழ்த்துவதற்காக இந்தியா உருவாக்கிவரும் அஸ்ட்ரா ஏவுகணை வரும் ஜூன் மாதம் முதல் தொடர்ந்து சோதனை செய்யப்படும்

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சோதனைச்சாலையின் மூத்த விஞ்ஞானி முனைவர் பிரகலாதா, இந்தியா தயாரித்துவரும் இலகுரக போர் விமானமான தேஜாஸில் பொருததிக் கொண்டுசெல்லும வகையில் தயாரிக்கப்படும் அஸ்ட்ரா ஏவுகணை 2006-07க்குள் சோதனைகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு அளிக்கப்படும் என்று கூறினார்.

ரஷ்யாவுடன் இணைந்து இந்தியா தயாரித்துவரும் அதிவேக ஏவுகணையான பிரம்மோஸை வாங்க உலகநாடுகள் பலவும் முன்வந்துள்ளன என்று கூறிய பிரகலாதா, இந்தியா கப்பற்படை முதலில் வாங்கிப் பயன்படுத்திய பின்னரே ரஷ்யாவின் ஒப்புதலுடன் நட்பு நாடுகளுக்கு விறகப்படும் என்று கூறினார்.

பிரம்மோஸ் ஏவுகணையின் விலை ரூ.15 கோடியிலிருந்து ரூ.18 கோடி வரை ஆகும் என்று கூறிய பிரகலாதா, இந்த ஏவுகணையின் 8 சோதனைகளும் வெற்றிகரமாக முடிந்துள்ளன என்றும் இந்தளவிற்கு வெறறிகரமாக எநதவொரு ஆயுத சோதனையும் நடைபெற்றதில்லை என்று ரஷ்ய விஞ்ஞானிகள் வியந்ததாகத் கூறினார்.

3தொன் எடையுடைய பிரமோஸ் ஏவுகணை 300 கி.மீ.தூரததில் உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றதாகும். தற்பொழுது கப்பற்படையின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுவரும் பிரம்மோஸ் ஏவுகணை விரைவில் போர் விமானங்களில் பொருததிப் பயன்படுததத்தகக வகையில் 1.5 தொன் எடையில் தயாரிக்கப்படும் என்று கூறிய பிரகலாதா, திரிசூல் ஏவுகணையும சோதனைகளைக் கடந்து சாதனை படைக்கக் காத்திருக்கிறது என்று கூறினார். (து)



பெங்களூரில் உள்ள எலங்கா விமானப்படைத் தளத்தில் ஏரோ இந்தியா 2005 விமானக் கண்காட்சி தொடங்கியுள்ளது. இதில் இந்தியாவின் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இலகுரகப் போர்விமானமான தேஜஸ், சாரங் ஹெலிகொப்டர்களும் வானில் வண்ணக் கோலங்களிட்டு செய்த சாகசக் காட்சிகள்.

# இயற்கைச் சீற்றங்கள் குறித்து சீனா முன்னெச்சரிக்கை

முன்னெச்சரிக்கையாக இருப்பது வாழ்க்கையில் எப்போதுமே நன்மையே தரும். தனிநபருககு மட்டுமல்ல நாடுகளுக்கும்தான்.

இயற்கைச் சீற்றங்கள் குறித்து முனனறிவிப்புக்காக இவ்வாண்டில் மட்டும் 30 நவீன கண்காணிப்பு ராடர்களை நிறுவ சீனா முடிவுசெய்துள்ளது. செலவு ரூ.324 கோடி.

தற்போது சீனாவில் 74 ராடர்கள் உள்ளன. நாடு முழுவதும் அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 84 ராடர்களை நிறுவ சனா முடிவுசெய்துள்ளது. இவறறைத தொடர்ந்து நாடு முழுவதும் மொத்தம் 158 ராடர்கள் நிறுவப்படும்.

இதன்மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தைச் சீனா பிடித்துவிடும்.

2004ஆம் ஆண்டில் மட்டும் இயற்கைச் சீற்றங்களால் சீனாவில் விவசாயத் துறைக்கு ரூ.8000 கோடிக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது. 6.79 கோடி ஏக்கர் நிலங்கள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## ரஷ்ய சுரங்க விபத்தில் 17பேர் மரணம்

ரஷயாவில் சைபீரியாப் பகுதியில் உள்ள குஸ்பாஸ் நிலக்கரிச் சுரங்கத்தில் மதேன் வாயு வெடித்ததில் 17 பேர் இறந்தனர்.

மேலும் 9பேரின் நிலை தெரியவில்லை. வாயு வெடித்தபோது சுரங்கத்தில் 30க்கும் அதிகமானோர் பணிபுரிந்து கொணடிருந்ததாகத் தெரிகிறது.

ரஷய நிலக்கரிச் சுரங்கங்கள் ஏற்கனவே இலாபமில்லாமல் செயல்பட்டு வருகின்றன. மேலும் அடிககடி விபத்துக்களும் ஏற்பட்டுவருகின்றன. (து)

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி - குறள்

வலம்புரி

## ஈழத் தமிழர்களின் போராட்டத்தை ஐ.நா.செயலர் அங்கீகரித்துள்ளார்

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், அதனால் ஏற்பட்ட மரணங்கள் குறித்து ஐ.நா.சபைச் செயலாளர் கொபி அனான் கண்டனம் தெரிவித்திருப்பது ஈழத் தமிழர்களின் வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயமாகும்.

சிங்கள அரசுகள் காலாகாலமாக ஈழத் தமிழர்கள் மீது நடத்திய தாக்குதல்கள் - அவர்களின் உரிமை பறிப்புகள் குறித்து சர்வதேச சமூகம் மௌனம் சாதித்து வந்தது.

தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் ஷெல் தாக்குதல், யுத்த விமான குண்டுவீச்சுத் தாக்குதல் எனப் பல்வேறு வழிகளிலும் தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களை கொலை செய்தபோது உலக நாடுகள் ஏதேனும் வருத்தம் தெரிவிக்காதா? கண்டனம் கூறாதா? என்று காத்திருந்த காலங்கள் உண்டு.

அந்தக் காத்திருப்புகள் ஏமாற்றத்திலேயே முடிந்தன. அரசின் பக்கமாகவே உலக நாடுகளின் கருத்துக்கள் அமைந்திருந்தன. சர்வதேச நாடுகளின் நிதி உதவியைப் பெற்று ஆயுதங்களை கொள்வனவு செய்து தமிழ் மக்களைக் கொலை செய்த இலங்கை அரசிற்கு உலக நாடுகளின் உதவி தாராளமாக வந்த வண்ணமே இருந்தது.

சிங்கள அரசுகள் உங்களிடம் உதவியைப் பெற்று யுத்தம் நடத்துகின்றது. எனவே தயவு செய்து நீங்கள் உதவி வழங்குவதை நிறுத்துங்கள். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று ஈழத் தமிழர்கள் சர்வதேசத்திடம் இரந்து கேட்டனர்.

அகிம்சைவழிப் போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினர். ஐ.சி.ஆர்.சி. முதல் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் வரை தேடிச் சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜர்களை கையளித்தனர். எதற்குமே சர்வதேச சமூகம் கண்திறக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதல் என்று உச்சம் பெற்றதோ, சிங்கள தேசத்தில் எப்போது குண்டு வெடித்ததோ அன்றிலிருந்து உலக நாடுகள் விழித்துக்கொண்டன.

தமிழ்மக்கள் கேட்டபோதெல்லாம் தாம் மௌனிகளாக இருந்தமை பெருந் தவறு என்ற உண்மையை அந்த நாடுகள் புரிந்து கொண்டன.

அதன் காரணமாகவே இப்போது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசுக்கு நிபந்தனை விதிக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் கண்டால் மட்டுமே எமது உதவிகள் கிடைக்கும் என அந்த நாடுகள் ஆணித்தரமாக கூறியுள்ளன.

இது இலங்கை அரசுக்கு ஏற்பட்ட முதலாவது பின்னடைவு. ஆனால், இப்போது நிலைமை மேலும் உயர்வு கண்டுள்ளது. ஆம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானே தலையிடும் அளவிற்கும், கண்டிக்கும் அளவிற்கும் விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டம் உச்சம் பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனதும் - போராளிகளின் கொலைக்கு ஐ.நா. செயலாளர் கொபி அனான் கண்டனம் தெரிவித்துள்ளார் எனில் அவர் ஈழத் தமிழர்களின் -விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கின்றார் - அங்கீகரிக்கின்றார் என்பதே பொருளாகும்.

## புனானைக் கொலைச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும்

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள் புனானைப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படுமென்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழத் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில், கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் .

கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோரின் கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

(று-8)

## 2005, 2006 ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்ட வேலைத் திட்டங்களுக்கு நியாப் 110 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2005,2006ஆம் ஆண்டுகளில் நியாப் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்காக 110 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, வழுக்கைஆறு புனரமைப்பதறகென 40மில்லியன் ரூபாவும், ஏனைய குளங்கள் புனரமைப்பிற்கென 10மில்லியன் ரூபாவும், உவர்நீர்த்தடுப்பு அணைகளைப் புனரமைப்பதற்கு 10மில்லியன் ரூபாவும், யாழ். மாவட்டத்தில் உள்ள 25கிராமங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கு 50மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான கிராமங்கள், குளங்கள் மற்றும் உவர்நீர்த் தடுப்பணைகள் என்பவற்றைத் தெரிவுசெய்வதற்கான பிரதேச செயலர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டு பிரதேச விவசாயக் குழுவின் அங்கீகாரத்துடன் முன்னுரிமைப்படுத்தும் வேலைகள் செய்யப் பட்டுவருகின்றன. (ரு-19)

## தேசிய அடையாள அட்டைகள் வழங்க யாழில் மார்ச் மாதம் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் தேசிய அடையாள அடடைகளை தொலைத்தவர்களுக்கும் அடையாள அட்டைகளை சேதத்திற்குள்ளாக்கியவர்களுக்கும் புதிய தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில், யாழ்.மாவட்டத்திலும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தேசிய அடையாள அட்டைகளை தொலைத்தவர்களுக்கும் அவற்றைச் சேதத்திற்குள்ளாக்கியவர்களுக்கும் புதிய அடையாள அட்டைகளை நடமாடும சேவை மூலம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக, யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால பாதிப்புக்குள்ளாகியவர்களது பெயர் விபரங்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலகங்களினாலும் திரட்டபபட்டு, அவ் விபரங்களை ஆட்பதிவுத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி விபரங்களுக்கேற்பவே ஆட்பதிவுத்திணைக்களத்தினால் இந் நடமாடும் சேவையில் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந் நடமாடும் சேவை மேற்கொள்ளப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித முத்திரைச் செலவோ, பதிவுச் செலவுகளோ இன்றி இலவசமாக தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரு-19)

## லண்டனில் வன்முறைகள் அதிகரிப்பு! இலங்கையர் உட்பட வெளிநாட்டவர் மீது பொலிஸார் தீவிர கண்காணிப்பு

(லண்டன்)

இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த கிரிமினல் கும்பல்களின் வன்முறை நடவடிக்கைகள் லண்டனில் அதிகரித்து வருவதால் சந்தேகத்துக்குரிய வெளிநாட்டவர் மீது கண்காணிப்பை தீவிரப்படுத்த லண்டன் பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக லண்டன் பொலிஸ் ஆணையாளர் ஜோன் ஸ்டீவன்ஸ டெய்லி நாளிதழுக்கு அளித்த பேட்டியில், இந்தியா, அல்பேர்னியா, அல்ஜீரியா, பங்களாதேஷ், சீனா, ஜமைக்கா, கொசாவோ, மத்துவேனியா, மால்டோவா, நைஜீரியா, பாகிஸ்தான், ருமேனியா, ரஷ்யா, சோமாலியா, இலங்கை, துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிலர் திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று குறிப்பிட்டார். இக் கும்பல்களைக் கண்காணிக்க புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் கிரிமினல்களுககு எதிராகக்கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இதற்கமைய வெளிநாட்டு சமூகங்களின் முக்கிய தலைவர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

## சுனாமிப் பேரலையினால் பழுதடைந்த சீனியைப் பயன்படுத்தி சாராயம் தயாரித்த இருவர் கைது

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பினால் பழுதாகி வீசப்பட்ட பெருமளவான சீனியைப் பயன்படுத்தி மாத்தறைப் பகுதியில் சாராயம் தயாரித்த இருவரை மாத்தறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

20 இலட்சம் ரூபா பெறுமதியான சாராயம் மற்றும் அதற்குத் தேவையான மூலப்பொருட்கள்,உபகரணங்கள் என்பவற்றுடன் இவ்விருவரும் கைதாகியுள்ளனர். நில்வளகங்கை ஓரமாக இயங்கிவந்த இந்த சட்டவிரோத சாராய உற்பத்தி நிலையம் கடந்த ஞாயிறு இரவு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தினால் பழுதடைந்து ஒதுக்கப்பட்ட 100 மூடை சீனி சாராயம் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.சந்தேக நபர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(க-9)

## திைசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நாம் எங்கும் நிற்க முடியாது. அடியும் உதையும்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டவாறே முன்னேறிக்கொண்டிருக்கிறோம். நாம் என்ன செய்ய முடியும்? உலகமும் அப்படியே தான் இருக்கும். பூமியும் அப்படியே தான் இருக்கும். அது நீலத்திலிருந்து பழுப்பாகமாறும், பழுப்பிலிருந்து நீலமாகும் அவ்வளவுதான்.

சுவாமி விவேகானந்தர்



மாவீரர்களின் உடலங்களைத் தாங்கிய ஊர்தி



இறுதி அஞ்சலி செலுத்த முண்டியடிக்கும் மக்கள்



இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது



கதறி அழும் உறவினர்கள்



இறுதி யாத்திரையின்போது

# பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திட இந்திய அரசு முன்வரவேண்டும்

## பாகிஸ்தானில் வைத்து லக்ஷ்மன் கதிர்காமர்

(இஸ்லாமாபாத்)

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உடனடியாக கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவைக் கோரியுள்ளார்.

அடுத்த மாத இறுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்நிலையில் கதிர்காமர் இவ் அறிவிப்பை விடுத்துள்ளார். புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், மற்றும் இலங்கைப் படையினருக்கு இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி அளித்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தமே கைச்சாத்திடப்படவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவுடன் பாகிஸ்தானுக்கு சென்றிருந்த கதிர்காமர் அங்கு அந்நாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.(ச-4)

# மரண தண்டனைக் கைதியான மட்டுவில் இளைஞன் விடுதலை

(கொழும்பு)

1990ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் காரைநகர் கடற்படைத்தளம் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்து கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட மட்டுவில் இளைஞன் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பு உயர்நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது மறைந்த நீதிபதி சரத்அம்பேப்பிட்டிய அவருக்கு மரண தண்டனை விதித்தார்.

இதுதொடர்பாக முன்னாள் எம்.பியும் சட்டத்தரணியுமான விநாயகமூர்த்தியினால் மேல்நீதிமன்றில் மேல்முறையீடுசெய்யப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு நேற்றுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனைவிசாரணை செய்த நீதிவான்களான காமே அபேயரட்ண மற்றும் இமாம் ஆகியோர்இத்தீர்ப்பை வழங்கினர்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் ரகுபதி என்றஇளைஞரே நேற்று விடுதலைசெய்யப்பட்டவராவர். (ச.4)

# அரச அதிபர் கூட்டங்களில் புலிகள் பின்னர் எதற்கு பொதுக்கட்டமைப்பு

## அகாஷியிடம் ஜே.வி.பி கேள்வி

(கொழும்பு)

ஜே.வி.பி தலைவர்களுக்கும் யப்பானின் விசேட சமாதானத்தூதுவர் யசூசிஅகாஷிக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது நிவாரணங்களில் பன்முகத்தன்மை தொடர்பாகவும் வடக்குக்கிழக்கு நிவாரணப்பணிகளில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதன் அவசியம் குறித்தும் ஜே.வி.பியினருக்கு அகாஷி வலியுறுத்தியிருக்கிறார்.

எனினும் இதனை ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான விமல்வீரவன்ச மற்றும் லால்காந்த ஆகியோர் அரசாங்க அதிபர்களின் தலைமையிலான நிவாரணக்குழுக்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் பங்கெடுத்துள்ளனர்.

இதைவிட அரசும் புலிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றுக்கு அவசியம் இல்லை என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (த-04)

## 'வாழும்கலை' இன்று அறிமுகவுரை

பெங்களூரைத் தலைமையகமாகக் கொண்ட வாழும் கலைப்பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த ரவிசங்கர் சுவாமிகளின் பிரதம சிஷ்யனின் இலவச அறிமுகவுரை இன்று பிற்பகல் 6 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் உள்ள நாவலர மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## அவசரகாலச்...

ரணைக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்து வாக்களிக்காது விட்டாலும் தாம் எதிர்த்து வாக்களிக்கப்போவதாக மகேஸ்வரன் எம்.பி. வலம்புரிக்குத் தெரிவித்தார்.

சுனாமி பேரலைத் தாக்கத்தின் பின்னரான நிவாரணப்பணிகளில் இராணுவத்தை ஈடுபடுத்தும் உள்நோக்கத்துடனேயே அவசரகாலச் சட்டத்தை நடை முறைக்கு அரசு கொண்டுவருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிக்காததால் அவசரகாலச் சட்டம் நிறை வேறக் கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-08)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், செயலாளர்கள், ஊழியர் தொழிற்சங்கத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுள்ளார். (ச)

# எமது விடுதலைப்பயணம் தொடரும்...

நேற்று மாலை மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக நடைபெற்ற, மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 4 மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அஞ்சலி உரையில் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் படுகொலையை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் கண்டித்திருப்பது தமிழர் பிரச்சினையை சர்வதேச சமூகம் உணர்ந்துவிட்டதை எடுத்துக்காட்டுகின்றது.

ஆனால் என்றுமே எமக்கு எதிரியாகவுள்ள இலங்கை அரசுதான் இன்னும் உணராமல் காரியமாற்றிக்கொண்டிருக்கின்றது.

தமிழ்பேசும் மக்கள் நிச்சயமாக தமிழர் தாயகத்தின் நீதிக்கான, நியாயத்திற்கான, உண்மைக்கான உரிமைப்போராட்டத்தின் பயணத்தில் நோக்கு, அதன் வளர்ச்சி, அதன் எதிர்காலம் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும் நிலைமை இந்த உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயல்படும் அனைத்து சக்திகளும், இலங்கை அரசும் உணர்ந்துகொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

பொதுமக்கள் மிகவும் உறுதியாகவிருக்கின்றார்கள். அவர்கள் தமது தாயகத்தின், தேசத்தின், எங்கள் தலைமையின் பலத்தை ஒருபோதும் பலவீனப்படுத்தவிடமாட்டார்கள்.

தமிழீழ தேசத்தை அழிக்க நினைத்தவர்கள் எல்லோருமே பெரும் கனவோடு இருந்த நேரம் அது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒருசில நாட்களுக்குள் தாங்கள் யார் என்பதையும், தங்கள் தேசத்தினுடைய ஒருமைப்பாட்டையும், போராட்டத்தின் உறுதியையும் வெளிப்படுத்தினார்கள்.

இப்படியான படுகொலைகளில் இன்னும் இன்னும் இந்த தேசத்தினுடையதும், தேச விடுதலையினதுடையதும் எங்கள் மக்களுடையதும் எதிர்காலத்தை நோக்கிய விடுதலைப் பயணத்திலே நாங்கள் இன்னும் வீறுநடைபோடுவோம்.

ஆகவே இந்த உயர்ந்த எங்கள் பாசத்திற்குரிய உறவுகள் மீது நாங்கள் சத்தியம் செய்கின்றோம். போராளிகளும், மக்களும் பொறுமையின் விளிம்பில் நிற்கின்றார்கள்.

பொறுமைக்கும் எல்லை உண்டு. இதனை எதிரிகள் உணர்ந்துசெயற்படவேண்டும். யுத்தநிறுத்தத்தையும், அமைதியையும் அதிக விலைகொடுத்தே நாம் கடைப்பிடித்து வருகின்றோம். அந்த வகையில் தேசியத் தலைவரின் எண்ணங்களையும், கருத்துக்களையும் மக்கள் மத்தியில் சரியாகவும், நேர்த்தியாகவும் கொண்டுசென்றவர் கௌசல்யன். இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

## பல்லாயிரம்...

பாதுகாப்பு, போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் வழங்கப்பட்டது.

தமிழீழ பொருண்மியத்துறைப் பொறுப்பாளர் கரிகால்ன், தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, மூத்த தளபதி ரமேஸ் ஆகியோரும் இதில் அடங்குவர். (04)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
11.02.2005 மட்டும்
பார்த்தீபன் – திரிசா மலோடு
வடிவேலு இன்னும் மலர் நடித்த
காதல் கிறுக்கன்
தினசரி 4 காட்சிகள்
10.30,2.30,6.30,9.30 (பு.நே)
12.02.2005 முதல்
டைட்டானிக் (தமிழாக்கம்)
நிறைஞ்சனாஸ்
சங்கானை
சத்தியராஜ், நமீதா
ஆகியோர் நடித்த
மகா நடிகன்
கா.நே –11.00, 2.45, 6.00 (பு.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.